அரசு ஊழியர்

ஜூலை 2017

மலர் : 38 இதழ் : 7

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக வெளியிடுபவர் :
இரா.பாலசுப்பிரமணியன்

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல்,
மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம்,
எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்:வைகை பிரிண்டர்ஸ்&பப்ளிஷர்ஸ்,
2/38, குயவர் வீதி, ஜோன்ஸ் சாலை,
சென்னை - 600 015.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*


### சூடா ஒரு கோப்பை சூப்

## விடுதலையும், சுதந்திரமும்!

“விடுதலை வேண்டுமா?”
என்றது காலம்.

“இல்லை சுதந்திரம் வேண்டும்”
என்றன பறவைகள்.

வேறுபாடு என்னவென்று
வினவியது காலம்.

“சிறையிலிருந்து விடுபடுதல்
விடுதலை எம்
சிறைகள் உடைபடுதல்
சுதந்திரம்”
என்றன பறவைகள்!

# “1988” வரலாற்றினை மீண்டும் படைப்போம்!

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின 12வது மாநில மாநாட்டின் முடிவின்படி அரசு ஊழியர் களுக்கான 8வது ஊதிய மாற்றம் செய்ய வேண்டும் 20 சதவீதம் இடைக்கால நிவாரணம் வழங்க வேண்டும், புதிய ஓய்வூதியத்திட்டத்தை ரத்து செய்ய வேண்டும், சத்துணவு, அங்கன்வாடி, ஊராட்சி செயலாளர்கள், கிராம உதவியாளர் போன்றோர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும், சாலை பணியாளர்களுக்கு 41 மாத பணி நீக்க காலத்தை பணிக்காலமாக அறிவிக்க வேண்டும், அவுட்சோர்சிங், தொகுப்பூதிய நியமனங்களை ரத்து செய்து, தற்போது பணி புரியும் ஊழியர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் போன்ற 6 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி ஏப்ரல் 25 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் அறிவிக்கப்பட்டது. திட்டமிட்டபடி ஏப்ரல் 25 அன்று வேலை நிறுத்தம் தொடங்கி யது. வேலை நிறுத்தம் நடைபெற்றபோது ஏப்ரல் 26 அன்று தமிழக அரசின் மூத்த அமைச்சர்களான பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு கே.ஏ.செங்கோட்டையன், நிதி மற்றும் பணியாளர் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் மாண்புமிகு டி.ஜெயகுமார், வருவாய்த் துறை அமைச்சர் மாண்புமிகு ஆர்.பி. உதயகுமார் மற்றும் நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் கே.சண்முகம் இ.ஆ.ப. ஆகியோர் தலைமையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில நிர்வாகி களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. பேச்சு வார்த்தையின்போது ஊதிய மாற்றக் குழு தனது அறிக்கையை குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் சமர்ப்பிக்கும் எனவும், சிறப்புக் காலமுறை ஊதியம் பெறுபவர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க பரிசீலிக்கும் எனவும், புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்ய ஜூலை 2017 இறுதிக்குள் பேசி முடிவு செய்யப்படும் எனவும், சாலைப் பணியாளர் களின் 41 மாத பணி நீக்கக் காலத்தை வரன்முறை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், அவுட்சோர்சிங், தொகுப்பூதிய மற்றும் தினக்கூலி முறை நியமனங்கள் ரத்து செய்ய பரிசீலிக்கப்படும் எனவும் உறுதியளித்ததின் அடிப்படையில் வேலைநிறுத்தம் நல்லெண்ண அடிப்படையில் விலக்கிக் கொள்ளப்பட்டது.

ஊதிய மாற்றக்குழு அறிவித்த 22-02-2017 அன்றைய மாண்புமிகு முதல்வரின் அறிவிப்பில் நான்கு மாத காலத்திற்குள் அறிக்கையை சமர்ப்பிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அறிவிப்பில் தெரிவித்ததற்கும் 26-04-2017 அன்றைய பேச்சுவார்த்தைக்கும் மாறாக நான்கு மாத காலம் முடிவுற்றும் ஊதிய மாற்றக்குழு தனது அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை.

ஆனால், அதற்கு மாறாக அலுவலர் குழுவின் காலவரை மேலும் மூன்று மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்யப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இது அமைச்சர்கள் தம்மிடம் அளித்த வாக்குறுதிக்கு மாறானது என்பதோடு, அரசு ஊழியர்களை மூன்றாம்தர குடிமக்களாக நடத்துவதற்கு ஒப்பானதாகும்.

மேற்படி போக்குகள், அரசு ஊழியர்களின் நலனில் இந்த அரசின் நடவடிக்கைகள் நம்பிக்கை யளிக்கவில்லை என்பதையே காட்டுகிறது. போராட்டம் என்ற மொழிதான் அரசுக்கு புரியும் மொழி என்பதை மீண்டும் நிரூபிக்க வேண்டியுள்ளது. எனவே நாம் திட்டமிட்டபடி அனைத்து மாவட்டங்களிலும் பயிற்சி வகுப்புகளை சிறப்பாக நடத்தி, ஊதிய மாற்றம் உட்பட ஏனைய கோரிக்கைகளை வென்றெடுக்க மிகத்தீவிரமான ஒரு ஒன்றுபட்ட போராட்டத்திற்கு தயாராவோம். மீண்டும் ஒரு “1988”ஆம் ஆண்டு வரலாற்று பதிவினை “2017”-ல் உருவாக்க தயாராவோம்! ❖

# குரூப் 2 தேர்வுக்கான இலவச பயிற்சி முகாம்

*மதுரை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கம்-இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் இணைந்து குரூப்-2 தேர்வுக்கான இலவச பயிற்சி முகாம். மேலப்பெருமாள் மேஸ்திரிவீதியில் உள்ள தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்க கட்டிடத்தில் ஞாயிறு அன்று காலை அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் முருகன் தலைமையில் நடைபெற்றது.*

*பயிற்சி முகாமை துவக்கி வைத்து முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் என்.நன்மாறன் பேசினார். மாவட்டச் செயலாளர் சு.கிருஷ்ணன், டிஒய்எப்ஐ மாவட்டச் செயலாளர் பி.கோபிநாத் ஆகியோர் வாழ்த்தி பேசினர். இதில் அரசு ஊழியர் சங்க வட்ட கிளை செயலாளர்கள் சித்திக், இரா.தமிழ் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்த இலவச பயிற்சி முகாம் 2017 ஆகஸ்ட் மாதம் வரை சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் நடைபெகிறது.* ❖

# பயிற்சி முகாம்

**தருமபுரி**

*தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் மாவட்ட அளவில் பயிற்சி முகாம் தருமபுரி சோகத்தூர் கூட்ரோடு அருகில் உள்ள ஆர்டி நகர், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் எம்.சுருளிநாதன் தலைமை வகித்தார். "சங்க இயக்கமும் தோழர்கள் இலக்கணமும்", "ஊதியமாற்ற பரிந்துரைகளும், அரசு ஊழியர்களின் நெடுந்துயரங்களும்" என்ற தலைப்பில் பயிற்சி நடைபெற்றது.*

*மாநில துணைத் தலைவர் எம்.ஞானதம்பி வகுப்பெடுத்தார். மாவட்டசெயலாளர் ஏ.சேகர் பெருளாளர் கே.புகழேந்தி, மாவட்ட துணைத் தலைவர்கள் எம்.சிவப்பிரகாசம், பி.எஸ். இளவேனில், எம்.யோகராசு, மாவட்ட இணைச் செயலாளர்கள் எம்.முனிராஜ் காவேரி ஆகியோர் பேசினர்.*

**கரூர்**

*20.5.2017 அன்று மாவட்டத் தலைவர் மு.மகாவிஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. சங்கப் பணியில் தலைமைப் பண்பு என்ற தலைப்பில் முன்னாள் மாநிலச் செயலாளர் எ.நிசார் அகமது பயிற்சி அளித்தார். இந்நிகழ்வில் மாவட்ட நிர்வாகிகள் சந்திரன், தாமோதரன், கருணாகரன் மற்றும் துறைவாரிச்சங்க நிர்வாகிகள் லட்சுமணன், பாலகிருஷ்ணன், பாலசுப்பிரமணியன், பழனிச்சாமி, சிவப்பிரகாசம், சுந்தரராஜ், அறிவழகன், சரவணன், மணிமேகலை, முத்துக்குமார், இளங்கோ உள்ளிட்டோர் பங்கேற்றனர். பொருளாளர் பொன்.ஜெயராம் நன்றி கூறினார்.* ❖

# பிரச்சனை மாடோ, மாமிசமோ அல்ல... மதவெறி...!

“யானைக்கு எர்ரம் என்றால் குதிரைக்கு குர்ரம்'' என்றொரு வட்டார வழக்கு மொழி உள்ளது. அது போல்தான் இருக்கிறது தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத்துறை அதிகாரிகள், இனவிருத்திக்காக ராஜஸ்தானில் பசுக்களை வாங்கி தமிழகத்திற்கு கொண்டுவந்தபோது தாக்கப்பட்ட சம்பவம். ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சல்மார் நகரில் 50 பசுக்களை விலைக்கு வாங்கி அவற்றை தமிழகத்திற்கு கொண்டுவர அந்நகர காவல்துறையினரிடம் முறைப்படி தடையில்லா சான்றுகளையும் பெற்று டிரக்குகளில் பசுக்களை ஏற்றிக்கொண்டு புறப்பட்டபோது, 'பசு பாதுகாவலர்கள்' என்ற அமைப்பைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்டோர் அந்த டிரக்குகளை சூழ்ந்து கொண்டு கல்வீச்சில் ஈடுபட்டு, டிரக்குகளின் முகப்பு கண்ணாடிகளை உடைத்ததோடு மட்டுமில்லாமல் டிரக் ஓட்டுநர்களையும் நையப்புடைத்துள்ளனர். இவர்கள் யாரும் தமிழக அதிகாரிகள் கூறிய வார்த்தைகளையோ, காட்டிய ஆவணங்களையோ, கேட்கவோ, பார்க்கவோ தயாராக இல்லாததோடு ஒருகட்டத்தில் தமிழக அதிகாரிகளையும் தாக்க முற்பட்டுள்ளனர். இந்தக் கும்பல் மேலும் ஒருபடி மேலே போய் அந்த டிரக்குகளை எரிக்க முயற்சி செய்துள்ளது. உடனடியாக போலீசாருக்கு தகவல் அளித்தும் அவர்கள் விரைந்து வந்து கலவரக் கும்பலை தடுக்கவோ, தாக்கப்பட்ட தமிழக அதிகாரிகளையும், வாகன ஓட்டுநர்களையும் மீட்கவோ நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுடன் பசு பாதுகாவலர்களின் செயல்களை கண்டிக்காமலும் கண்டு கொள்ளாமலும் அலட்சியமாக இருந்துள்ளனர். தமிழக அதிகாரிகள் காவல்துறை மேலதிகாரிகளுக்கு நிலைமையின் விபரீதத்தை உணர்த்திய பின்னரே மாடுகளுடன் கூடிய டிரக்குகள் எரிக்கப்படவிருந்த நிகழ்வு தடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த செய்திகளை அறிந்த பின் சில கேள்விகள் எழுவது தவிர்க்க இயலாததாகி உள்ளது. உண்மையில் இந்த 'பசு பாதுகாவலர்கள்' அமைப்பைச் சேர்ந்தவர்கள் யார்? மாடுகள் கடத்தப்படவில்லை என்றும், முறையான அனுமதியுடனும், விதிமுறைகளுடனும்தான் கொண்டு செல்லப்படுகின்றன என்றும் தமிழக அதிகாரிகள் கூறிய பின்னரும், அவர்கள் அந்த வாகனங்களையும் ஓட்டுநர்களையும் தாக்கியது ஏன்? மாடுகள் கடத்தப்படுவதாக நினைத்திருந்தால் அந்த டிரக்குகளை சிறைபிடித்து காவல் துறையினரிடம் ஒப்படைக்காமல் சட்டத்தை தங்கள் கையில் எடுத்துக்கொள்ள இவர்களுக்கு அனுமதி வழங்கியது யார்? இவர்களது நடவடிக் கைகளை காவல்துறையினர் கண்டுகொள்ளாமல் அலட்சியப் போக்குடன் நடந்து கொண்டதற்கு என்ன காரணம்? உண்மையில் பசுக்களை பாதுகாப்பவர்கள் அவை கொண்டுசெல்லப்படும் வாகனங்கள் மீது கல்வீசித் தாக்குவதையும், பசுக்களை தாங்கிய டிரக்குகளை எரிக்கவும் முயற்சிப்பார்களா? எல்லாவற்றையும் விட முக்கியமானது தமிழக அதிகாரிகள் மாடுகளை கொண்டு செல்ல உரிய ஆவணங்களையும் காவல்துறையின் தடையில்லா சான்றிதழையும் காட்டிய பின்னரும், பசு பாதுகாவலர்கள் கலவரத்தில் ஈடுபட்டுள்ளதிலிருந்து அவர்கள் கல்வியறிவுள்ளவர்கள்தானா? அல்லது காட்டு மிராண்டிகளா? என்ற சந்தேகத்தை எழுப்புவதாக உள்ளது.

இந்த நிகழ்வு, மத்தியில் ஆளும் மோடி அரசு மதரீதியான முரடர்களை சட்டத்தின் போர்வையில் வளர்த்து வருகிறது என்ற உண்மையை வெளிக்காட்டியிருக்கிறது. அதன் தாக்கம்தான் மாடுகளை யார் கையில் பிடித்திருந்தாலும் தாக்க வேண்டும் என்றும், மாட்டுக்கறி உண்பவர்களை தூக்க வேண்டும் என்ற சித்தாந்தத்தை ஊக்குவிக்கத் துவங்கியிருக்கிறது. பிரச்னை மாடோ, மாமிசமோ அல்ல, மதவெறி. இது இந்தியாவின் மதச்சார்பற்ற தன்மைக்கு உலை வைக்கும் செயலாகப் போய் முடியும் என்பதை ஆள்பவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். அன்றின், அதை அவர்களுக்கு மக்கள் புரிய வைக்க வேண்டிய நேரத்தில் புரிய வைப்பார்கள்.

தமிழக அதிகாரிகள் மற்றும் டிரக் ஓட்டுனர்கள் ராஜஸ்தான் மாநிலத்தில் பசு பாதுகாவல்கள் என்ற மதவெறி கும்பலால் தாக்கப்பட்டதற்கும், அந்த தாக்குதலை தடுக்காமல் வேடிக்கை பார்த்த காவல்துறையினருக்கும், தாக்குதலுக்கு வருத்தம் தெரிவிக்காத இராஜஸ்தான் மாநில அரசுக்கும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கண்டனம் தெரிவிக்கிறது. மேலும் பசு பாதுகாவலர்கள் என்ற பெயரில் வன்முறையில் ஈடுபடும் மதவெறி அமைப்புகளை தடை செய்ய வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மத்திய அரசை வலியுறுத்துகிறது.


- **அன்பு**

# எலியென நம்மை இகழ்ந்தவர் நடுங்க, புலியெனச் செயல் செய்ய புறப்படுவோம்!

**த**மிழ்நாடு அரசு ஊழியர்களின் எட்டாவது ஊதிய மாற்றத்திற்காக அமைக்கப்பட்ட அலுவலர் குழுவின் காலவரையை 30.06.2017ம் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு நீட்டித்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 12வது மாநில மாநாட்டில் ஆறு அறைகூவல் தீர்மானங்களை நிறைவேற்றப்பட்டன. தமிழக அரசு, அரசு ஊழியர்களுக்கான ஊதிய மாற்றத்தை உடனே செய்ய வேண்டும், மத்திய அரசுக்கு இணையான அனைத்து படிகளையும் வழங்கிட வேண்டும், ஊதிய மாற்றம் ஏற்படுத்தும் வரை அரசு ஊழியர்கள் இப்போது வாங்கும் ஊதியத்தில் 20 சதவீதம் இடைக்கால நிவாரணமாக வழங்க வேண்டும், சிறப்பு காலமுறை ஊதியத்தை ஒழித்து வரையறுக்கப்பட்ட ஊதியம் மற்றும் பென்சன் வழங்க வேண்டும், புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்ய வேண்டும், சாலை பணியாளர்களின் 41 மாத பணிநீக்க காலத்தை பணிக் காலமாக அறிவிக்க வேண்டும்; அவுட்சோர்சிங். தொகுப்பூதிய நியமனங்களை ரத்து செய்து தற்போது பணிபுரியும் ஊழியர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் - போன்ற தீர்மானங்களின் பேரில் அரசு நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் 2017 ஏப்ரல் 25ம் தேதி முதல் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தை ஊழியர்கள் கையிலெடுப்பார்கள் என அரசுக்கு எச்சரித்திருந்தோம்.

பிப்ரவரி மாதத்தில் அலுவலர் குழுவை அமைத்துவிட்டு போராட்டம் தொடங்கும் வரை வாளாயிருந்த அரசாங்கம், போராட்டம் தொடங்கிய இரண்டாவது நாளில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் நிர்வாகிகளை அழைத்துப் பேசி, 2017 ஜூன் 30க்குள் ஊதிய மாற்றத்திற்கான அலுவலர் குழுவின் பரிந்துரைகள் பெறப்பட்டு விடும் எனவும், ஜூலை 2017க்குள் ஊதிய மாற்றம் செய்யப்பட்டுவிடும் எனவும் உறுதிமொழி கொடுத்தது. அந்தப் பேச்சு வார்த்தையின் போது மூத்த அமைச்சர்களான பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், நிதி மற்றும் பணியாளர் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் டி.ஜெயக்குமார், வருவாய்த்துறை அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் மற்றும் நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் கே.சண்முகம் இ.ஆ.ப., ஆகியோர் பங்கேற்றிருந்தனர். புதிய முதல்வராக எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் பதவி ஏற்று சில நாட்களே ஆன நிலையில், அரசு ஊழியர்கள் அரசுக்கு கொஞ்சமாவது கால அவகாசம் வழங்க வேண்டும் என்றும், இந்த அரசு, அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் அக்கறையுள்ள அரசு என்றும், அதனால் போராட்டத்தைக் கைவிடுமாறும் கேட்டுக் கொண்டனர்.

மத்திய அரசு ஊழியர்கள் ஊதிய மாற்றமும், ஊதிய மாற்ற நிலுவைகளும் 1.1.2016 முதல் பெற்று விட்ட நிலையில், தமிழக அரசு ஊழியர்கள் 16 மாதங்களாக பொறுமையுடன் காத்திருப்பதையும், ஊதிய மாற்றத்துக்கான அலுவலர் குழுவானது சில பல முறையீடுகள், போராட்டங்களுக்குப் பிறகே தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதையும், கடந்த ஊதிய மாற்றத்தின் போது, ஊதிய மாற்றம் செய்கிறோம் என்ற பெயரில் அலுவலர் குழு, ஒரு நபர் குழு, குறை தீர்க்கும் குழு என பலவகையாக குழுக்களை அமைத்து அரசாங்கம் அரசு ஊழியர்களை சொல்லொணாத் துயரத்திற்கு உள்ளாக்கியதையும், சென்ற ஊதிய மாற்றத்தில் உள்ள முரண்பாடுகள் தீர்க்கப்படாமலேயே பத்தாண்டுகள் கடந்து அடுத்த ஊதிய மாற்றம் வந்துவிட்டதையும், அதேபோன்றதொரு நிலை இந்த ஊதிய மாற்றத்திலும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் அரசு ஊழியர்கள் உறுதியாக இருப்பதையும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள் அமைச்சர்களுக்கு விளக்கமாக தெரிவித்து, அதனால், இந்த ஊதிய மாற்றம் அறிவிக்கப்படும் வரை அரசு ஊழியர்ளுக்கு 1.1.2016 முதல் அவர்கள் ஊதியத்தில் 20 சதவீதத்தை இடைக்கால நிவாரணமாக வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினோம். ஆனால் அமைச்சர்கள், அலுவலர் குழுவின் காலவரையரை மேலும் நீட்டிக்கப்பட வேண்டிய அவசியம் நிச்சயம் எழாது எனவும், 2017 ஜூன் 30ம் தேதிக்குள்



அலுவலர் குழுவின் பரிந்துரை அறிக்கை பெறப்பட்டு, ஜூலை 2017க்குள் ஊதிய மாற்றம் ஏற்படுத்தப்பட்டுவிடும் எனவும், அதனால் இடைக்கால நிவாரணம் பொறுத்து கோரிக்கை தேவையில்லாதது எனவும் கூறினர். ஒருவேளை 2017 ஜூன் 30க்குள் அலுவலர் குழு ஊதிய மாற்ற பரிந்துரைகளை அளிக்காவிட்டால் 20 சதவீஇடைக்கால நிவாரணம் வழங்குவது பற்றி பரிசீலிக்கலாம் எனவும் தெரிவித்தனர். அமைச்சர்கள் அவ்வளவு ஆணித்தரமாக இடைக்கால நிவாரணம் என்ற பேச்சே எழாது என்று கூறியதன் அடிப்படையிலும், புதிய முதல்வர், புதிய அமைச்சர்கள், புதிய அரசாங்கம் என்பதால் அவர்களுக்கு இவை குறித்து முடிவெடுக்க கால அவசாசம் வழங்க வேண்டும் என்ற நியாயத்தின் நிலைப்பாட்டினாலும், தமிழ்நாடுஅரசு ஊழியர் சங்கம் வேலை நிறுத்தப் போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி வைத்தது.

அமைச்சர்களுடனான பேச்சு வார்த்தையின்போது, புதிய ஓய்வூதிய திட்டம் சம்பந்தமாகவும், காலமுறை ஊதியத்தை ஒழித்து வரையறுக்கப்பட்ட ஊதியம் நிர்ணயிப்பது குறித்தும் பேசியபோது, அவர்கள் எல்லாவற்றுக்கும் 2017 ஜூலை வரை கால அவகாசம் கேட்டனர். பேச்சுவார்த்தையின் போது அனைத்து ஊழியர் சங்கங்களையும் அழைத்து ஊதிய மாற்றம் சம்பந்தமான விளக்கங்களையும், முரண்பாடுகளையும், கோரிக்கைககளையும் கேட்க வேண்டும் என்ற நமது கோரிக்கையும் ஏற்கப்பட்டு அதன் பேரில் மட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அனைத்து ஊழியர் சங்கங்களின் கருத்துக்களையும் அலுவலர் குழு கேட்டதானது கொஞ்சம் நம்பிக்கையளிப்பதாக இருந்தது. ஆனாலும் கடந்தகால கசப்பான அனுபவங்களும் நம்மை எச்சரிக்கையோடு இருக்க வைத்தன.

2002ல் இதுபோல்தான் அப்போது அதிமுக அமைச்சராக இருந்த பொன்னையன் அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக ஒப்புதல் கடிதம் எழுதி கையெழுத்து போட்டுக் கொடுத்துவிட்டு கோரிக்கைகளை நிறைவேற்றாமல் துரோக நாடகமாடியதையும் அரசு ஊழியர்கள் அனைவரும் அறிவர். இந்த பொய்யுரைகளும், வாக்குறுதிகளும் போராட்டத்தை சில காலத்திற்கு வேண்டுமானால் தள்ளி வைக்க உதவுமே தவிர அதுவே அரசு ஊழியர்களின் உரிமைகளை பறித்து விட முடியாது என்பதற்கான சாட்சிதான் 2003 வேலை நிறுத்தப் போராட்டம். 2006ம் ஆண்டு அமைக்கப்பட வேண்டிய ஊதிய மாற்ற அலுவலர் குழு காலதாமதமாக அமைக்கப்பட்டு 2008ல் ஊதிய மாற்றம் ஏற்படுத்தப்பட்டு 1.1.2006 முதல் 31.12.2006 வரையிலான ஒரு வருடத்திற்கு பணப்பயன்கள் மறுக்கப்பட்டு கருத்தியல் ரீதியாக கணக்கில் கொள்ளப்பட்டன.

2008ல் வெளியிடப்பட்ட ஊதிய மாற்ற அரசாணைகள் முரண்பாடுகளின் மொத்த உருவமாக இருந்ததும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பலகட்ட போராட்டங்களுக்குப் பின்னர் ஒரு நபர் குழு அமைக்கப்பட்டதும், அதுவும் ஊதிய மாற்ற முரண்களை சரிப்படுத்தாமலேயே மேலும் முரண்பாடு களுடன் அரசாணைகளை வெளியிட்டதாலும், அரசு ஊழியர்கள் மன உளைச்சலுக்கும், பண நெருக்கடிகளுக்கும் ஆளானார்கள். அதன் காரணமாக வெடித்துக் கிளம்பிய போராட்டங்களால் குறை தீர்க்கும் குழு அமைக்கப்பட்டு அது ஊதியக்குழு பரிந்துரைகளில் முரண்பாடுகள் உள்ளதை ஒப்புக் கொண்டு வேறு சில அரசாணைகளை வெளியிட்டு அவையும் முரணான அரசாணைகளாக வெளி வந்தன.

இந்த ஊதிய மாற்றத்தில் அத்தகைய குளறுபடிகள் ஏதும் நடந்து விடக்கூடாது என்றுதான் நாம் அரசாங்கத்தையும் அலுவலர் குழுவையும் திரும்பத் திரும்பச் நினைவூட்டிக் கொண்டிருக்கிறோம். ஆனால் பழைய குருடி கதவை திறடி கதையாகத்தான் மீண்டும் அதே காட்சிகள் அரங்கேறுகின்றன.

சென்ற முறை தமிழக அரசு ஊழியர்களுக்கு அமல்படுத்தப்பட்ட ஊதிய மாற்றத்தில் ஓராண்டு நிலுவைத் தொகை மறுக்கப்பட்டது என்பதையும் அது 1.1.2006 முதல் கருத்தியல் ரீதியாகவும். 1.1.2007 முதல் பணப்பலனுடனும் அமல்படுத்தப்பட்டது என்பதையும் ஏற்கெனவே அரசின் கவனத்திற்கு பலமுறை நாம் கொண்டு சென்று நிலுவைத் தொகையினை கேட்டபோது அப்போது அரசுத் தரப்பில், அடுத்த ஊதிய மாற்றத்தில் காலதாமதமோ, கருத்தியல் ரீதியான கணக்கீடுகளோ இல்லாமல் அலுவலர் குழுவின் பரிந்துரைகள் உடனடியாக அமல்படுத்தப்படும் என்றும், பிந்தைய ஆண்டுகளில் தவணைத்தொகை வழங்க வேண்டிய அவசியம் இருக்காது என்ற உறுதிமொழி வழங்கப்பட்டது.

சென்ற ஊதிய மாற்றத்தின்போது நிகழ்ந்த தாமதங்களையும் முரண்களையும் மாண்புமிகு முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களும், நிதியமைச்சரும் ஒப்புக்கொண்டு, இனி அமைக்கப்படும் ஊதிய மாற்றத்திற்கான அலுவலர் குழுவின் பரிந்துரைகள் காலதாமதப்படுத்தாமல் வழங்கப்படவும், அரசாணைகள் முரண்பாடுகள் இல்லாமல் வெளியிடப்படவும் தவணைகளில் நிலுவைத்தொகை வழங்க வேண்டிய சூழ்நிலை எழாமல் இருக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் பேரவையில் தெரிவித்துள்ளதையும் இங்கே நினைவுபடுத்த வேண்டியுள்ளது.

13-02-2014 ஆம் தேதி தமிழக சட்டப்பேரவையில் மாண்புமிகு தமிழக நிதி அமைச்சர் அவர்கள் முன்வைத்த 2014-15ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் வரவு செலவு திட்ட உரையில் வருவாய் கணக்கில் செலவுகள் தலைப்பின்கீழ் 1ஆம் பத்தியில் கூறியுள்ளதாவது:-

''2016-17ஆம் ஆண்டு முதல் ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப் படுத்தப்படும் என கருதப்பட்டுள்ளது. முந்தைய ஊதியக் குழுக்கள் போலன்றி, இக் குழுவின் பரிந்துரைகள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும் எனவும் பிந்தைய ஆண்டுகளில் தவணைகளில் நிலுவைத் தொகை வழங்க வேண்டிய சூழ்நிலை எழாது எனவும் கருதப்பட்டுள்ளது.''

ஆனால், இப்போது வந்துள்ள அரசாணை மறைந்த முதல்வர் ஜெயலலிதா மற்றும் அப்போதைய நிதியமைச்சர் வழங்கிய உறுதிமொழிகளுக்கும் சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கைகளுககும் முற்றிலும் முரணாக உள்ளது.

ஆக இதிலிருந்து ஒன்று தெளிவாக விளங்குகிறது, ஆளும் அரசுக்கு அரசு ஊழியர்கள் மேல் அக்கறை என்பது இம்மியளவும் இல்லை என்பதும் முடிந்தவரை நம்ப வைத்து, முடிவில் கழுத்தறுப்பதே கைவந்த கலையாகவும் ஆட்சியாளர்கள் உணரத் தலைப்பட்டு விட்டார்கள் என்பதற்குமான எச்சரிக்கை மணிதான் இது.

மூத்த அமைச்சர்களின் உறுதிமொழி, செயல்பாடுகள் முரண்பாடுகளுடனோ, குறைபாடுகளுடனோ இருப்பது ஜனநாயகத்தை கேலிக்கூத்தாகும் செயல்களாகும். ஜூன் 30க்குள் அலுவலர் குழு பரிந்துரைகள் வழங்காத நிலையில், இனி ஜூலை 30க்குள் ஊதிய மாற்றம் வருவது சாத்தியமில்லை என்பது நிதர்சனம். எனில் அமைச்சர் பெருமக்கள் மூவரும் நமது பேச்சுவார்த்தையின்போது ஒப்புக்கொண்டபடி ஊதிய மாற்றம் ஜூலை 2017க்குள் ஏற்படுத்தப்படாத நிலையில் அரசு ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணமாக 20 சதவீத ஊதியத்தை 2017 ஜூலை 17ம் தேதிக்குள் வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால், அரசு ஊழியர்கள் அமைச்சர்கள் சொல் கேட்டு தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கும் வேலை நிறுத்தப் போராட்டத்தை தமிழகமெங்கும் தொடர வேண்டியிருக்கும் என எச்சரிக்கை செய்கிறோம்.

அதிகார வர்க்கத்தின் கட்டுப்பாட்டில் அரசாங்கமும், சிறைவாசியின் கட்டுப்பாட்டில் கட்சியும், மத்திய அரசின் கட்டுப்பாட்டில் அமைச்சர்களும் இருக்கும் நிலையில், ஊதிய மாற்றம் உள்ளிட்ட உரிமைகளை வென்றெடுக்க போராட்டம், இடைவிடாத போராட்டம் சமரசமற்ற போராட்டத்தை தவிர நம் கையில் வேறு ஆயுதம் இல்லை.

பூட்டிய இரும்புக் கூட்டின் கதவு
திறக்கப்பட்டது சிறுத்தையே வெளியில் வா!
எலியென உன்னை இகழ்ந்தவர் நடுங்க
புலியெனச் செயல் செய்ய புறப்படு வெளியில்
நம்பினை பகலினை நள்ளிருள் என்றே
சிம்புட்பறவையே சிறகை விரி, எழு
சிங்க இளைஞனே திரும்பு, முகம்திற, விழி!

- பாரதிதாசன்

எனவே அரசு ஊழியர்களே, ஆசிரியர்களே ஊதிய மாற்றம் ஏற்படுத்தும் வரை அரசு இடைக்கால நிவாரணமாக 20 சதவீத ஊதியத்தை 1.1.2016 முதல் வழங்கிடவும் புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்தல் உள்ளிட்ட உரிமைகளுக்காகவும் காலவரையற்ற வேலை நிறுத்தத்தை கையிலெடுப்போம். அரசு ஊழியர்களை பாதிப்புக்குள்ளாக்கியவர்களுக்கு, வீதியில் இறங்கி பாடம் போதிப்போம். மீண்டும் சாதிப்போம். ❖

# இந்திய அரசியலமைப்புச் சட்டம் - ஒரு பார்வை

## மத்திய, மாநில உறவுகள்

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் கூட்டாட்சி கூறுகளையும், ஒற்றையாட்சி தன்மைகளையும் கொண்ட கலப்பு அமைப்பாகும்.

அதிகாரப் பரவல் முறையையும், அதிகாரக் குவியல் முறையையும் கொண்ட மாற்று இயல்புகளை சம நிலையை ஏற்படுத்தியது இந்திய அரசியலமைப்பு சட்டமாகும். இந்த சட்டத்தில் மத்திய, மாநில உறவுகளுக்கு 3 வகையில் முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது. 1. சட்டமன்ற உறவுகள் 2. நிர்வாக உறவுகள் 3. நிதி உறவுகள்.

## சட்டமன்ற உறவுகள்

சட்டமன்ற உறவுகள் என்பது மத்திய, மாநில அரசுகளுக்கு இடையிலான அதிகார பங்கீடு பற்றியதாகும். மத்திய பட்டியலில் பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரங்கள், குடியுரிமை, வங்கிகள், நாணய செலாவணி, இரயில் போக்குவரத்து, தபால் துறை போன்ற 97 அதிகாரங்கள்.

மாநில பட்டியலில் பொது சட்டம் ஒழுங்கு, காவல் துறை, உள்ளாட்சி, பொது சுகாதாரம், விவசாயம், நீர் பாசனம், தொழில்கள் போன்ற 66 அதிகாரங்கள் உள்ளது.

பொதுப் பட்டியலில் 47 அதிகாரங்கள் இடம் பெற்றுள்ளன. மத்திய, மாநில அரசுகளுக்கு பொதுவான அதிகாரங்கள் ஆகும். இருவரும் இதனை பயன்படுத்திக் கொள்ளலாம். இச்சட்டங்கள் பற்றி மாறுதல் செய்ய மத்திய, மாநில அரசுகள் திருத்த சட்டங்கள் இயற்றலாம். ஒரே பொருள் பற்றி மத்திய, மாநில அரசுகள் சட்டம் இயற்றும்போது மாறுபாடு அல்லது வேறுபாடுகள் இருந்தால் மத்திய சட்டமே செல்லுபடியாகும் என அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது.

மத்திய அரசு பட்டியலிலும், மாநில அரசு பட்டியலிலும் இடம் பெறாத எந்த பொருள் பற்றியும் சட்டம் இயற்ற மத்திய அரசுக்கு மட்டுமே அதிகாரம் உண்டு என அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது.

மாநில பட்டியலில் காணப்படும் பொருட்கள் பற்றி சட்டம் இயற்றும் அதிகாரம் மாநில சட்டமன்றத்திற்கு மட்டுமே உண்டு. ஆனால், 5 அசாதாரண சூழ்நிலையில் மத்திய அரசு மாநில அரசின் சட்டங்களை முடக்கலாம். 1. தேசிய நலன் பாதிக்கப்படும் போது 2. நெருக்கடி நிலை அறிவிக்கப்படும்போது 3. மாநில அரசின் ஒப்புதலோடு மத்திய அரசு சட்டமியற்றலின்போது 4. பன்னாட்டு உடன்படிக்கைகள் பற்றிய மத்திய அரசு சட்டமியற்றும்போது 5. மாநிலத்தில் அரசியலமைப்பு சீர்குலையும்போது சட்டத்தை முடக்கி வைக்கலாம்.

மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள தண்ணீர், மின்சாரம் போன்றவற்றின் மீது மாநில அரசு வரி விதிக்கலாம். ஆனால், அதற்கு குடியரசுத் தலைவரின் அனுமதியை பெற வேண்டும். மத்திய அரசு நாடாளு மன்றத்தின் ஒப்புதலோடு, மாநில அரசு மேற் கொள்ள வேண்டிய சில பணிகளையும் பொறுப்பு களையும் சுமத்தலாம்.

## நிர்வாக உறவுகள்

மத்திய மாநில உறவுகள் இணக்கமாக இருக்க நிர்வாக உறவுகள் சுமூகமாக இருக்க வேண்டும். 1. மாநில அரசின் அதிகாரங்கள், நாடாளுமன்றம் நிறைவேற்றும் சட்டங்களை பின்பற்றக் கூடியதாக வும், அவற்றுக்கு இடையூறு இல்லாதவாறும் இருத்தல் வேண்டும். 2. மாநில அரசு மத்திய அரசின் பணிமுறை செயற் கட்டளைகளை ஏற்க மறுத்தால், மாநில நிர்வாகத்தை மத்திய அரசு தன் கட்டுப் பாட்டின்கீழ் கொண்டு வர முடியும். 3. மத்திய அரசின் சட்டங்களை மாநில அரசு நிறைவேற்ற வேண்டும் என்று கட்டுப்படுத்தும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு உள்ளது. 4. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ். அதிகாரிகளை தற்காலிக பணி நீக்கம் செய்யலாம். ஆனால், அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முடியாது. 5. அவசியம் ஏற்பட்டால் மாநில அரசு சம்மதமின்றி மத்திய அரசு படைகளை நிறுத்தி வைக்கலாம்.

## நிதி உறவுகள்

அரசியலமைப்புச் சட்டம் மத்திய, மாநில அரசுகளுக்கு இடையே பகிர்ந்து கொள்ள வேண்டிய மத்திய அரசின் வரி வருவாயை 4 பகுதிகளாக பிரித் துள்ளது. 1. மத்திய அரசு விதிக்கும் சில வரிகளை மாநில அரசு வசூலித்து வைத்துக் கொள்ளலாம். 2. சில வரிகளை மத்திய அரசு வசூலித்து மாநிலங் களுக்கு வழங்க வேண்டும். 3. சில வரிகளை மத்திய அரசு வசூலித்து மத்திய, மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்து கொள்ள வேண்டும். 4. சில வரிகளை மத்திய அரசு வசூலித்து மாநிலங்களுக்கிடையே விருப்பப்படி பகிர்ந்து கொள்ள வேண்டும்.

பல வகைகளில் மத்திய அரசிடம் இருந்தே மாநில அரசுகளுக்கு நிதி வரவேண்டியதுள்ளது. மத்திய அரசின் நிதியை எதிர்பார்த்தே மாநில அரசுகள் திட்டங்கள் போட வேண்டியுள்ளது.

- **நெல்லை ஆறுமுகம்**



# அவர்கள் செய்யட்டும் அரசியல் வியாபாரம்! நாம் செய்வோம் களை எடுக்கும் விவசாயம்!

**பொ**துவாகவே நம்முடைய மக்களுக்கு ஒரு இயல்பு உண்டு. ஊடகங்களில் வரும் செய்திகள் தங்களை பாதிக்காதவரை அதை ஒரு செய்தி யாகவே பார்த்து பழக்கப்பட்டு விடுவதும், அது தங்களையும், தங்கள் குடும்பத்தையும் பாதிக்கும் நிலை வரும்போது அழுது புலம்புவதும்..., நம்வீட்டு குழாயில் தண்ணீர் வந்துகொண டிருக்கும் வரை நமக்கும், நதிநீர் பிரச்னைக்கும் சம்பந்தமில்லை எனும் போக்கில் இருப்பதுவும்..., கர்நாடகா தண்ணீர் விடவில்லை, காவிரியில் தண்ணீர் வரவில்லை என்பதெல்லாம் வேறு நாட்டில் நடக்கும் நிகழ்வாகப் பார்ப்பதுவும்..., வாடிக்கையாகிப் போன விஷயங்கள்.

இந்த ரகத்தில் இப்போது புதிதாக சேர்ந்திருப் பது பிளாஸ்டிக் அரிசி. சமூக வளைத்தளங் களிலும், ஊடகங்களிலும் இதுபற்றி செய்திகள் முதலில் வந்தபோது நம்மில் பலபேருக்கு அது மகாராஷ்டிராவில்தான், உத்தரபிரதேசத்தில்தான் தமிழ்நாட்டில் இல்லை என்று இருந்துவிட்டோம். சமீபத்தில் ஒரு தாய் தன் குழந்தைக்கு இரண்டு நாள் பிளாஸ்டிக் அரிசியை சாதமாக வடித்து ஊட்டிவிட்டதாகவும், குழந்தைக்கு என்ன ஆகுமோ என்று பயந்துகொண்டிருப்பதாகவும், சமூக வலைத்தளத்தில் பதைபதைக்கும் காட்சியைப் பார்த்த பின்னர் எல்லோரும் இப்போது சோற்றை உருண்டை கட்டி தரையில் உருட்டிப் பார்த்துவிட்டு உண்ண ஆரம்பித்திருக்கிறார்கள்.

பிளாஸ்டிக் அரிசி என்பதெல்லாம் பொய், அதை தயாரிக்க ஆகும் செலவு அரிசி விலையை விட அதிகம். ஆகவே யாரும் பயப்பட வேண்டாம் என்று அரசாங்கம் பிரச்சாரம் செய்கிற அளவுக்கு பிரச்சனை முற்றியிருக்கிறது.

பிளாஸ்டிக் அரிசி இப்போதைக்கு தமிழகத் திற்கு வரவில்லை என்று கூட வைத்துக்கொள் வோம். ஆனால் நம்முடைய விவசாயிகளை நாம் இப்படியே விட்டுவிட்டால் கூடிய விரைவில் பிளாஸ்டிக் அரிசியை வாங்கிச் சாப்பிடும் அவல நிலை நமக்கு தோன்றிவிடும் என்பது மட்டும் நிச்சயம். விவசாயம் செய்து அரிசியை விளை வித்துக் கொடுக்கமுடியாமல் தமிழகத்தில் மட்டும் கடந்த ஒரு ஆண்டில் 146 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இந்த நிலை தொடர்ந்தால்... பிளாஸ்டிக் அரிசியாவது கிடைக்குமா என்று மக்கள் பிச்சையெடுக்கும்

நிலை வந்துவிடக்கூடும். போர்முனையில் முதல் வரிசையில் நிற்கும் வீரர்களைப் போன்றவர்கள் விவசாயிகள். அவர்கள் விழ ஆரம்பித்து விட்டால் ஆபத்து அடுத்த வரிசையில் நிற்பவர்களுக்குத் தான். இப்போது கிட்டத்தட்ட இங்கே நடந்து கொண்டிருப்பது இதுதான். அனைத்து மக்களின் வயிற்றுக்கு உணவளிக்கும் உழவன் வாக்கரிசிக் குக்கூட வழியில்லாமல் மாண்டு போவதும் அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் விதமாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமல் இறந்தது வறுமையால் அல்ல குடும்ப பிரச்சனையால் என பிரச்சனையை திசைமாற்றி செலுத்தியதன் காரணமாக கடந்த ஒரு வருடத்தில் மட்டும் தமிழகத்தில் 146 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு மாண்டிருக்கிறார்கள்.

விவசாயிகள் விஷயத்தில் அரசுகளுக்கு ஏன் இவ்வளவு பிடிவாதம்? அவர்களுடைய பிரச்சனை நாட்டின் தலையாய பிரச்சனையாக பார்க்கப்படாத தற்கு என்ன காரணம்? விவசாயிகளின் கடன்களுக்கு வானம் பொய்த்ததும், காவிரி நீர் தடுக்கப் பட்டதும், வறட்சி வாட்டி வதைத்ததும் தான் காரணம் என்பது எல்லோருக்கும் தெரிந்திருக்கும் நிலையில் மத்திய மாநில அரசுகள் கடன்களைத் தள்ளுபடி செய்ய, ஒருவரை மாற்றி ஒருவர் கைகாட்டிக் கொண்டிருக்கும் கேவல அரசியல் இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் தொடரப் போகிறது?

வறட்சியால் பாதிக்கப்பட்ட தமிழகத்திற்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும். காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும். மத்திய மாநில அரசுகள் விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் போன்ற கோரிக்கைகளுக்காக விவசாயிகள் தெருமுனையிலிருந்து தில்லி வரை போராடுகிறார்கள் அவர்களின் பிரச்சனையை தீர்த்து வைக்க மத்திய அரசோ, மாநில அரசோ முன்வரவில்லை. விவசாயிகளின் இன்றைய நிலைக்கு அரசியல்வாதிகளும் அரசாங்கங்களுமே காரணம்.

மழை எப்போதாவதுதான் வரும், புயல் எப்போதாவதுதான் வீசும், வெள்ளம் எப்போதாவதுதான் பெருக்கெடுக்கும் அப்போது பார்த்துக்கொள்ளலாம் என்று அரசாங்கமே இயற்கையின் விதிகளை மீறி, விவசாய நிலங்களை வீட்டு நிலங்களாக மாற்றிய செயல்களை மறந்துவிட முடியாது. ஆற்றுமணலை குத்தகைக்கு விட்டு நதித் தாயின் அடிவயிறு ரத்தக்களறியாகும் வரை மண்ணை சுரண்டி எடுக்க அனுமதித்ததும், கிரானைட் கற்களுக்காக மலைகளைக் குடையவும், அனுமதித்த அளவுக்கு மேலேயும் பாறைகளை வெட்டவும் விட்டுவிட்டு பார்வையாளர்களாக இருந்துவிட்ட அரசாங்கங்கள்தான் தமிழகத்தின் நீர் ஆதாரங்கள் பூமிப் பந்தின் மையப்புள்ளியை நோக்கி கீழிறங்கிடக் காரணங்கள் என்பதை அரசுகள் உணர்ந்து விவசாயத்தை, விவசாயிகளைக் காக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

எல்லா வளங்களும் உள்ள நம் தமிழ்நாட்டின் விவசாயிகள் டெல்லியில் நிவாரணப் பிச்சை கேட்டு நிர்வாணமாகப் போராடும் அவலங்களுக்கும், அந்த அவலங்களுக்கு ஆறுதல் சொல்லக் கூட செல்லாத நம் பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் அலட்சியத்திற்கும், ஒன்றுபட்டு குரலெழுப்பாத தமிழக அரசியல்கட்சிகளே காரணம் என்றால் அது மிகையில்லை.

காவிரி ஆற்றில் அரசியல் சாக்கடை கலந்து விட்ட நிலையில், பிரதம மந்திரியின் ஆசியோடு உச்சநீதிமன்ற உத்தரவுகள் மீறப்படுகின்ற சூழ்நிலையில், இனி அந்த நீர் தமிழக விவசாயிகளையும் விவசாயத்தையும் காக்கும் என்பதை இப்போதைக்கு ஒதுக்கி வைத்துவிட்டு, தமிழக நதிகளை இணைக்கும் திட்டத்தை துரிதப்படுத்தி நிறைவேற்றிட தமிழக மக்கள் தீவிர போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். பக்கத்து மாநிலத்தில் மிகக்குறுகிய காலத்திலேயே நதிகளை இணைத்து கின்னஸ் சாதனை படைக்க முடிந்திருக்கும் நிலையில் நம்மால் மட்டும் ஏன் முடியாது? இங்கே நம்பிக்கையூட்டும் இளைஞர்கள் இருக்கிறார்கள். அர்ப்பணிப்பு உணர்வுள்ள அரசு ஊழியர்கள் இருக்கிறார்கள். அனுபவமிக்க ஆன்றோர்கள் இருக்கிறார்கள். தோள் கொடுக்கும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். விவசாயிகளும், தொழிலாளர்களும் ஒன்று சேர்ந்தால் ஒரு நாட்டின் தலையெழுத்தையே மாற்றி எழுதலாம் என்பது வரலாறு. நாம் யார் தயவையும் நீருக்காகவும், சோறுக்காகவும் எதிர்பார்த்து காத்திருக்க வேண்டியதில்லை. நாமனைவரும் ஒன்று சேர்ந்து நாட்டு மக்களின் நலனில் துளிகூட அக்கறையில்லாத அரசியல் கட்சிகளை தூக்கி வீசுவோம். அரசியல் கட்சிகள் அரசியல் மட்டுமே செய்து கொண்டிருக்காமல் உழவுக்கும் தொழிலுக்கும் உகந்ததை செய்ய நிர்ப்பந்திப்போம். இருக்கின்ற இயற்கை வளங்களை பாதுகாப்போம். ஆகவே அரசு ஊழியர்களே, இளைஞர்களே, பொது மக்களே, நாம் அனைவரும் விவசாயிகளுடன்

ஒன்றுகூடி விவசாயத் தொழிலை வளர்த்தெடுக்கும் பணியில் நம்மை அர்ப்பணிப்போம். தூர் வாரப்பட வேண்டியது ஏரிகள் மட்டுமல்ல, ஆழப்படுத்தப்பட வேண்டியது கண்மாய்கள் மட்டுமல்ல, சாக்கடை அரசியலும்தான்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், விவசாயிகள் போராட்டம் நடத்திய போது அவர்களுக்கு ஆதரவாக நின்று போராடிய இயக்கமாகும். இந்த போராட்டங்களின் போது விவசாய சங்கங்களை சேர்ந்த தோழர்கள், இறந்துபோன விவசாயிகளின் வாரிசுகள் கல்விக் கட்டணம் செலுத்த முடியாததால் பள்ளிக்குச் செல்ல முடியாமல் உள்ளதாக தெரிவித்தனர். கடன் தொல்லையால் இறந்துபோன விவசாயிகளின் குழந்தைகள் கல்வி கற்பதற்கு கஷ்டப்படக்கூடாது என்பதுடன், அவர்களின் எதிர்காலம் பாடப்புத்தகங்களில் புதைந்து கிடப்பதால் அவர்களுக்கு உதவுவது நமது சங்கத்தின் தலையாய கடமை என்று மாநில செயற்குழு முடிவு செய்து அதற்கான நிதி உதவியை திரட்ட அனைத்து மாவட்டங்களுக்கும் தெரிவித்து, இறந்துபோன விவசாயிகளின் குழந்தைகள் மட்டுமல்லாமல், கடன்தொல்லையால் அவதிப்படும் விவசாயிகளின் குழந்தைகளும் தடையின்றி கல்வி பயில முட்டுக்கட்டையாக இருக்கும் பொருளாதாரத் தடையை நீக்குவதென தீர்மானித்தோம்.

அதன் விளைவாக இதுவரை பத்து மாவட்டங்களிலிருந்து மட்டுமே ரூ.2,64,000/- உண்டி வசூல் மூலம் திரட்டப்பட்டு அது உரியவர்களைப் போய்ச்சேர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களிலும் இதற்கான நிதி திரட்டப்படுகிறது. இந்த தொகை சிறிதெனினும் இதன்மூலம், நொடிந்துபோன விவசாயிகளின் குழந்தைகளின் எதிர்காலம் ஒளிமயமானதாக இருக்கும் என்ற நம்பிக்கை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்கு உண்டு. விவசாயிகளுக்கான ஆதரவு, நிதி திரட்டுவதோடு நின்றுபோகாமல், இன்றைய இளைஞர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் மேற்கொள்ளும் ஏரிகளை தூர் வாருதல், கண்மாய்களை ஆழப்படுத்துதல், மரங்களை நடுதல், இயற்கை வளங்களை பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைகளிலும் அரசு ஊழியர்கள் தங்களை இணைத்துக் கொள்ளவுள்ளனர். வாருங்கள் தோழர்களே... நீருக்காகவும், சோறுக்காகவும், நாட்டு மக்களை நடுவீதியில் நிற்க வைத்திருக்கும் அரசியல் கட்சிகளை களையெடுக்கும் விவசாயம் மேற்கொள்வோம். விவசாயிகளை மட்டுமல்ல, விவசாயத்தை மட்டுமல்ல, வறண்டுபோன வாழ்வாதாரத்தையும் வளப்படுத்துவோம்.

***எங்களுக்குரிய மழையை இனி***
***ஏகாதிபத்தியங்கள் திருடமுடியாது!***
***எங்களுக்குரிய பகலை இனி***
***ஏகபோகங்கள் விழுங்கமுடியாது!***
***எங்களுக்குரிய பூமியிலிருந்து இனி***
***எங்களை யாரும் அந்நியப்படுத்தமுடியாது!***
***ஆம்... இனி எங்களுக்காக நாங்களே***
***எங்களை ஆளப்போகிறோம்!***

என ஆர்ப்பரிப்போம், நேசத்துடன் தேசத் தொண்டாற்ற அரசு ஊழியர்களும், விவசாயிகளும், தொழிலாளர்களும், இளைஞர்களும் ஒன்றுபடுவோம். நமக்கான விடியல்களை நாமே உருவாக்குவோம்! ❖

# போராடிய மருத்துவர்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம்

*கிராமபுற மக்களுக்காக ஆட்சி செய்கிறோம் என கூறும் மத்திய, மாநில அரசுகள் புதிய உத்திரவுகள் மூலமாக கிராம மக்களுக்கு கிடைக்கும் பலன்களை பறிக்கும் நடவடிக்கையை செய்கிறது. மருத்துவ பணி என்பது உயிர் காக்கும் அத்தியாவசிய பணியாகும். மருத்துவ பட்ட மேற்படிப்பில் அரசு மருத்துவர்களுக்கு 50 சத இட ஒதுக்கீடு கிடைக்க அவசர சட்டம் இயற்ற வேண்டும். நீட் தேர்விலிருந்து தமிழகத்துக்கு விலக்கு அளிக்க தமிழக அரசின் சட்டத்துக்கு குடியரசு தலைவரின் ஒப்புதல் வழங்கவேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி அரசு மருத்துவர்களும், பட்டமேற்படிப்பு மருத்துவர்களும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களுக்கு ஆதரவாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.*

**கிருஷ்ணகிரி**

*மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் பி.சந்திரன் தலைமை வகித்தார். சத்துணவு ஊழியர் சங்கத்தின் வி.தேவராஜ், நகராட்சி ஊழியர் சங்கத்தின் சிவா ஆகியோர்*

வாழ்த்தி பேசினர். பட்டு வளர்ச்சித் துறை அலுவலர் சங்கத்தின் ஆர்.நடராஜன் சிறப்புரை யாற்றினார். வட்ட பொருளாளர் சக்திவேல் நன்றி கூறினார்.

### தருமபுரி

மாவட்டத் தலைவர் எம்.சுருளிநாதன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் ஏ.சேகர், பொருளாளர் கே.புகழேந்தி மாவட்ட நிர்வாகிகள் எம்.சிவப்பிரகாசம், சி.காவேரி, சாமிநாதன், சங்கர், பிரபாகரன் ஆகியோர் உரையாற்றினர்.

### நாகப்பட்டினம்

அரசு மாவட்டத் தலைமை மருத்துமனை முன்பு மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் விளக்கவுரையாற்றினார். அரசு மருத்துவர் சங்கத்தைச் சார்ந்த டாக்டர் ரேணுகா போராட்டம் குறித்து உரையாற்றினார். நாகை தொழிற்சங்க கூட்டமைப்பு தலைவர் சு.சிவகுமார் நிறைவுரை யாற்றினார். மாவட்டப் பொருளாளர் பா.ராணி நன்றி கூறினார்.

### காஞ்சிபுரம்

செங்கற்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முன்பு மாவட்ட தலைவர் வெ.லெனின் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் சா.முகம்மது உசேன் கோரிக்கை விளக்கவுரை நிகழ்த்தினார். அதனை தொடர்ந்து துறைவாரி சங்க நிர்வாகிகள் கே.பக்கிரி, பி.சித்திரைச் செல்வி, கே.பூங்குழலி, ஆர்.கோவிந்தன், பி.இராமமூர்த்தி ஆகியோர் கண்டனவுரை நிகழ்த்தினர்.

தமிழ்நாடு அரசு மருத்துவர்கள் சங்க மாவட்ட தலைவர் மருத்துவர் சுதாகர் நிறைவுரை நிகழ்த்தினார். இறுதியாக செங்கற்பட்டு வட்டக் கிளை தலைவர் கே.கன்னியப்பன் நன்றி கூறினார்.

### கரூர்

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 3.5.2017 அன்று காலை 7 மணிக்கு மாவட்டத் தலைவர் மு.மகாவிஷ்ணன் தலைமையில் ஆதரவு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் கெ.சக்திவேல் விளக்கவுரை யாற்றினார். இதில் துறைவாரி சங்க நிர்வாகிகள் என்.வெங்கடாசலம், டி.செல்வக்குமார், என்.சந்திரன், கே.இளங்கோ, ஆர்.பிரேம்குமார், எம்.அண்ணாத்துரை, என்.செல்வன், ஆர்.சுரேஷ் குமார், சிவசண்முகம், எல்.பாலசுப்பிரமணியன், செ.விஜயக்குமார், பி.பழனிச்சாமி, இரா. தாமோதரன், முத்துக்குமார், கே.கருணாகரன், சுப்பிரமணியன், ஆ.சங்கர், பி.பாலகிருஷ்ணன், சந்தானம், அரசு மருத்துவர் சங்க மாவட்டச் செயலாளர் டாக்டர் நந்தகுமார் ஆகியோர் உரையாற்றினர். மாவட்டப் பொருளாளர் பொன்.ஜெயராம் நன்றி கூறினார். மாநில துணைத் தலைவர் எம்.சுப்பிரமணியன் நிறைவுரை யாற்றினார்.

### திருவாரூர்

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் வெ.சோமசுந்தரம் விளக்கவுரை ஆற்றினார். மாநில செயலாளர் எம்.சௌந்திர ராஜன் நிறைவுரை ஆற்றினார். துறைவாரி சங்க நிர்வாகிகள் சி.சுந்தரலிங்கம், சண்முகம், ஆர்.ராஜசேகரன், சத்திவடிவேல், பி.மகாலிங்கம் ஆகியோர் வாழ்த்தி பேசினர். மணிவண்ணன் நன்றி கூறினார்.

### மதுரை

மதுரையில் அரசு மருத்துவர்கள் கண்ணில் கருப்புத் துணி கட்டிக் கொண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். இந்நிகழ்வில் மாவட்டத் தலைவர் முருகன், செயலாளர் சு.கிருஷ்ணன், மருந்தாளுநர் சங்க மாநில பொதுச் செயலாளர் பாலமுருகன் ஆகியோர் கலந்து கொண்ட கண்டன ஆர்ப் பாட்டம் நடைபெற்றது.

### நீலகிரி

அரசு மருத்துவமனை வளாகத்தில் மாவட்டத் தலைவர் ஆனந்தன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஆஸரா விளக்கவுரை யாற்றினார். துறைவாரி சங்கத் தோழர்கள் விஸ்வநாதன், குமார், ராஜ்குமார், கோவிந்தம் மாள் ஆகியோர் வாழ்த்தி பேசினர். நிறைவாக சிசிலி நன்றி கூறினார். இதில் 60 பெண் ஊழியர்கள் உட்பட 110 பேர் பங்கேற்றனர்.

### திருப்பூர்

வட்டக் கிளை துணைத் தலைவர் ஆர்.சண்முக சுந்தரம் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடை பெற்றது. அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.அம்சராஜ் சிறப்புரையாற்றினார். துறைவாரி சங்க நிர்வாகிகள் பங்கேற்று வாழ்த்தி பேசினர். ஆரீஃப்பானு நன்றி கூறினார். ❖

# ‘விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் சுற்றறிக்கையும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் எச்சரிக்கையும்!

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தமிழகத்தில் உள்ள அனைத்து அரசுத் துறை ஊழியர்களையும், ஊழியர் சங்கங்களையும் உள்ளடக்கிய பொது அமைப்பாகும். அரசு ஊழியர்களின் நலன்களைக் காக்கும் உரிமைகளுக்காக குரல்கொடுப்பதும், போராடுவதும் அவற்றை பெற்றுத் தருவதும் இச் சங்கத்தின் பிரதான நோக்கமாகும். இவை மட்டு மின்றி சமுதாயத்தில் நடக்கும் அநியாயங்கள், சட்டவிதி மீறில்கள் போன்ற சமூக அக்கரையுள்ள பிரச்னைகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பொதுமக்கள் நலனுக்காகவும் குரல் கொடுக்கும் அமைப்பாகும். தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும், வட்டங்களிலும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கிளைகள் உள்ளன.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 19வது பிரிவு எழுத்துரிமைக்கும், கருத்துரிமைக்கும் உத்தர வாதமும், பாதுகாப்பும் வழங்கியுள்ளது. இப்பிரிவின்படி முக்கிய ஆறு உரிமைகள் இந்திய குடிமக்களுக்கு உறுதி படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் முக்கிய மானது எல்லோருக்கும் சமஉரிமை, எழுத, விமர்சிக்க சுதந்திரம், பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்காத வகையில் ஆயுதங்களின்றி ஒன்று கூட அனுமதி, சங்கம் அமைத்துக் கொள்ளும் உரிமை போன்றவை யாகும். இந்த அடிப்படை உரிமைகள் பிறருடைய உரிமைகளுக்கு எதிரானதாகவோ, பிறருக்கு தொந்தரவு கொடுப்பதாகவோ, பிறருடைய குணாம் சத்தை களங்கப்படுத்துவதாகவோ, நற்பெயருக்கு ஊறு விளைவிப்பதான பொய்யான அறிக்கைகளாக இருக்கக்கூடாது என்றும் இச்சட்டத்தில் தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் இந்த உரிமைகளுக்கு முரணாக விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அரசு ஊழியர் சங்கங்கள் மற்றும் அமைப்புச்சாரா அமைப்புகளின் கருத்துச் சுதந்திரத்தை முடக்கும் வகையிலும், பறிக்கும் வகையிலும் பார்வை 1ல் கண்டுள்ள சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளார். அவரின் சுற்றறிக்கையின்படி விருதுநகர் மாவட்டத்தில் அரசு பொது சுவர்களில் அரசுத்துறை சங்கங்களைச் சேர்ந்தவர்களும், அரசு சாரா அமைப்புகளும் மட்டுமே சுவரொட்டிகள் மற்றும் போஸ்டர்கள் ஒட்டி சுவர்களின் அழகைக் கெடுப்பதாக மிகைப்படுத்தப் பட்டுள்ளதோடு மட்டுமல்லாமல், சங்கங்களுக்கும் அரசு சாரா அமைப்புகளுக்குமாக மட்டுமே இந்த சுற்றறிக்கை அனுப்பப்பட்டு, உரிமைகளுக்காக உரத்து குரல் கொடுக்கும் பொது ஊழியர்களை தீவிரவாதிகள் போல் சித்தரிக்கப்பட்டுள்ளனர்.

அறிவிப்பு பலகைகளில் மட்டுமே அறிவிப்பு செய்ய வேண்டும், அலுவலக துறைத்தலைவரின் அனுமதி பெற்று அறிவிப்பு பலகையை பயன்படுத்த வேண்டும், சுவரொட்டிகளை அச்சிடும் போது அதில் எத்தனை நகல்கள் அச்சிடப்பட்டது, யாரால், எந்த அச்சகத்தில் அச்சிடப்பட்டது போன்ற விவரங்கள் ஒவ்வொரு சுவரொட்டியிலும் இருக்க வேண்டும் என்றும், எக்காரணம் கொண்டும் அரசு பொது சுவர்களை பயன்படுத்தக்கூடாது என்றும் மீறு பவர்கள் மீது தமிழ்நாடு பொது இடங்களின் அழகைக்கெடுத்தல் சட்டம் 1959ன் பிரிவு 4(B)ன் படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ள நிபந்தனைகள் அடக்குமுறையின் உச்ச கட்டமாகவே தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் பார்க்கிறது.

பொதுவான உரிமைகளுக்காக பதாகைகள் பிடிப்பதும், போராட்ட காலங்களில் சங்கத் தீர்மானங் களை பிரதானப்படுத்தி போஸ்டர்கள், சுவரொட்டிகள் ஒட்டப்படுவதும் காலம்காலமாக நடந்து வரும் நடைமுறைகளாகும். இதில் கட்டுப்பாடுகளை விதித்து ஒடுக்கப்பார்ப்பது அடிப்படை உரிமை மீறலாகும். அரசு ஊழியர் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் யாரும் சங்கத்தின் பெயர் போடாமல் போஸ்டரோ சுவரொட்டியோ ஒட்டுவதில்லை. ஒட்டப்படும் சுவரொட்டிகள் அலுவலக வளாகத்திற்குள்தான் பெரும்பாலும் ஒட்டப்படுகின்றன. குறிப்பிட்ட போராட்டங்கள் முடிவுக்கு வந்தவுடன், அவற்றை சங்க நிர்வாகிகளே கிழித்து அப்புறப்படுத்தி விடுகின்றனர். மேலும் இத்தகைய சுவரொட்டிகளில் பிறருடைய பெயரை, புகழைக் கெடுக்கும் வகையில் விபரங்கள் இருப்பதாக காவல்துறை நினைத்தால் சம்பந்தப்பட்ட சங்கத்து நிர்வாகிகளை அழைத்துப் பேசி நடவடிக்கைகள் மேற்கொள்வதும்தான் இதுவரை நடைமுறையாக இருந்து வந்திருக்கிறது. சங்க நிர்வாகிகள் யாரும் தீவிரவாதிகளோ, தலைமறைவு எதிரிகளோ அல்ல. தவறான சுவரொட்டியோ போஸ்டரோ ஒட்டினால் அவர்கள் மீது காவல் துறையினர் நடவடிக்கை எடுக்க இந்திய தண்டனைச் சட்ட பிரிவுகள் இருக்கும் போது தமிழ்நாடு பொது இடங்கள் (அழகு கெடுதலை தடுத்தல்) சட்டம் 1959ன் படி நடவடிக்கை எடுக்கப்படும் என மிரட்டும் தொனியில் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளதானது அரசு ஊழியர்கள் யாரும் இனிமேல் சுவரொட்டியோ போஸ்டரோ ஒட்டக்கூடாது என்பதற்கான எச்சரிக்கை

யன்றி வேறில்லை.

அரசு ஊழியர்கள் தங்களுடைய உரிமைகளுக்காகவோ அல்லது நிர்வாகத்தின் தவறான நிலைப்பாட்டினை எதிர்த்தோ போராடுவதற்கான பலவகை அனுமதிக்கப்பட்ட உத்திகளில் சுவரொட்டியும், போஸ்டர்களும் ஒருவகை. அதற்காக ஒவ்வொரு முறையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அனுமதி பெற்றுதான் சுவரொட்டி அச்சடிக்கப்பட வேண்டும் என்பது சாதிய அமைப்புகளுக்கும், தீவிரவாத ஆதரவு கும்பல்களுக்கும் பொருந்தலாம் ஆனால் அரசு ஊழியர்களுக்கும் அதே அளவுகோல் என்பது மாவட்ட ஆட்சியர் அரசுத்துறை அமைப்புகளின் மீது கொண்டுள்ள காழ்ப்புணர்ச்சியை காட்டுவதாகவே அமைந்துள்ளது. மேலும் நிபந்தனைகளை மீறுபவர்கள் மீது தமிழ்நாடு பொது இடங்கள் (அழகைக் கெடுத்தல்) சட்டம் 1959ன் பிரிவு 4(B)ன்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது அரசு ஊழியர்களை மற்றும் அரசு சாரா அமைப்பினரை அச்சுறுத்தி மிரட்டும் தொனியாகும்.

தமிழ்நாடு பொது இடங்கள் (அழகு கெடுதலை தடுத்தல்) சட்டம் 1959ன் 4வது பிரிவானது பொது இடங்களில் உள்ள சுவர்களின் அழகைக் கெடுக்கும்படி சுவரொட்டிகள் மற்றும் தட்டிகள் வைப்பதைப் தடுப்பது பற்றியும் மற்றும் அவை போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கக்கூடாது என்பதை வலியுறுத்துவது பற்றியுமான பிரிவாகும். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சுவரொட்டிகளும், போஸ்டர்களும் பெரும்பாலும் அலுவலக வளாகங்களுக்குள் மட்டுமே ஒட்டப்படுபவை என்பதையும், மாநாடு பேரணி போன்ற நிகழ்வுகளில் மட்டுமே பேரணி செல்லும் சாலைகளில் அவை ஒட்டப்படுவதும் தட்டிகள் வைக்கப்படுவதும் நிகழ்ச்சிகள் முடிந்ததும் அவை உழியர்களால் அப்புறப்படுத்துவதும் இன்றுவரை நடைமுறையாக உள்ளதும் காவல்துறையினரும், உயரதிகாரிகளும் அறிந்ததுதான். ஆனால் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் மட்டும் அரசுத்துறை சங்கங்களை மிரட்டும் தொனில் இந்த சுற்றறிக்கையை காவல்துறை அதிகாரிகளுடன் சேர்ந்து கொண்டு வெளியிட்டிருப்பது ஒரு சுற்றறிக்கையின் மூலம் அரசு ஊழியர்களை அடிமைத் தனத்திற்குள் தள்ளிவிடும், அடக்குமுறை செயலாகும் .

இத்தகையதொரு சுற்றறிக்கையை வெளியிடுவதற்கு முன்னர் அவர் சங்க நிர்வாகிகளை அழைத்துப் பேசியிருக்கலாம். அரசு அலுவலகங்களில் உள்ள பொது சுவர்களின் அழகைக் கெடுக்காத வகையில் நடந்து கொள்ள வலியுறுத்தி சுமூக தீர்வை எட்டியிருக்கலாம். அரசு ஊழியர் சங்கத்தினர் ஒட்டும் போஸ்டர்களால் எந்த வகையான சட்டம் ஒழுங்கு பிரச்னை ஏற்படுகிறது என்பதை விவரித்து விவாதித்து நல்லுறவைப் பேணியிருக்கலாம். ஆனால் குறிப்பிட்ட தரப்பினரை கலந்தாலோசிக்காமலேயே இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது உள்நோக்கம் கொண்டது மட்டுமல்ல, காழ்ப்புணர்ச்சியின் உச்சகட்டம்.

எதை மையப்படுத்தி இந்த சுற்றறிக்கையை மாவட்ட ஆட்சியர் வெளியிட்டுள்ளார் என்பதை நம்மால் உணர முடியாமல் இல்லை. அரசு அதிகாரிகள் சிலபேர் முறைகேடுகள் செய்வது தொடர்பாக மாவட்ட நிர்வாகத்தின் கவனத்திற்கு சங்கங்கள் அளிக்கும் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு விருதுநகர் மாவட்டத்தில் உள்ளது. அப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கள் வரும்போது விரைந்து நடவடிக்கை எடுத்து சரிசெய்ய வேண்டியது மாவட்ட ஆட்சியரின் முதற்கடமையாகும். அதை கண்டுகொள்ளாமல் இருப்பதும் முறைகேடுகளுக்கு எதிரான போராட்டங்கள் வலுக்கும் போது இதுபோன்ற சுற்றறிக்கைகள் மூலம் ஊழல் முறைகேடுகள் செய்பவர்களை காப்பாற்ற முயற்சிப்பதும்தான் ஒரு மாவட்ட ஆட்சியரின் போக்க என்றால், அவரை எதிர்த்து போராட வேண்டிய அவசியம் எழுவதும் தவிர்க்க இயலாததாகிவிடும். அரசின் உயர் அதிகாரிகளின் தவறுகளை முறைகேடுகளை மூடிமறைப்பதற்காக இதுபோன்ற சுற்றறிக்கைகளை வெளியிட்டு அரசு ஊழியர்களை, அரசுசாரா அமைப்பினரை மிரட்டும் போக்கை விருதுநகர் மாவட்ட ஆட்சியர் கைவிட வேண்டும். ஊழியர் சங்கங்கள் அளிக்கும் முறைகேடுகள் மீது விசாரணையோ நடவடிக்கையோ இல்லை என்றால், அடுத்த இடம் வீதிதான். வீதிகளில் இறங்கி அதிகாரிகளின் முறைகேடுகளை மக்களிடம் சொல்லி போராடாமல் இருக்க, போஸ்டர்கள் ஒட்டாமல் இருக்க, மாவட்ட நிர்வாகம்தான் தகுந்த பேச்சுவார்த்தையோ உரிய நடவடிக்கையோ மேற்கொள் வேண்டுமே தவிர, சட்டங்களைக் காட்டி தவறுகள் செய்தவர்களை தண்டிக்க இடமளிப்பதும், போராடுபவர்களின் மீது நடவடிக்கை எடுப்பதும் எதிர்விளைவுகளையே ஏற்படுத்தும்.

எனவே முற்றிலும் உள்நோக்கத்துடன், காழ்ப்புணர்ச்சியுடன் மாவட்ட ஆட்சியர் வெளியிட்டிருக்கும் சுற்றறிக்கையை உடனே திரும்பப் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அன்றின், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் இதற்காக மாநிலம் தழுவிய போராட்டத்தை நடத்தி விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் உள் நோக்கத்தையும். விருதுநகர் காவல்துறை உயர் அதிகாரிகளின் காழ்ப்புணர்ச்சியையும் உலகுக்கு உணர்த்த வேண்டியிருக்கும்.

**- மு.அ.**

# எல்லோரும் படிக்க வேண்டிய புத்தகம்! எப்போதும் பாதுகாக்க வேண்டிய பெட்டகம்!

ஜூன் மாத அரசு ஊழியர் ஊதிய மாற்ற சிறப்பு இதழாக வெளிவந்து உள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்திய தொழிற்சங்க வரலாறு, மத்திய மாநில அரசு ஊழியர் அமைப்புகள் உருவான விதம் தொடர்பாக விரிவாக குறிப்பிடப்பட்டு உள்ளது மிகவும் பயன் உள்ளது. கடந்த கால வரலாற்றை நிகழ் கால அரசு ஊழியர்கள் அறிந்து எதிர்கால திட்டமிடலுக்கு அந்த அனுபங்களை கணக்கில் கொண்டு போராட்டத்தை இயக்கத்தை மேலும் பலமாக கொண்டு செல்ல உதவும் வகையில் தங்களின் பதிவுகள் வெளிவந்து உள்ளது மகிழ்ச்சி.

மத்திய மாநில அரசுகளின் ஊதிய குழுக்கள் தொடர்பான பதிவு சிறப்பாக உள்ளது. சமீபத்தில் நடைபெற்ற அரசு ஊழியர் சங்க இயக்கங்கள் அதனால் ஏற்பட்ட பயன்கள் சங்கத்திற்கு ஊழியர் மத்தியில் ஏற்பட்ட அங்கீகாரம் அமைச்சர்கள் அதிகாரிகள் ஊதிய குழு அதிகாரிகள் உடன் சந்திப்புகள் நமது பலத்தை அதிகரித்து உள்ளது என்றால் அது மிகையாகாது. இந்த விபரங்கள் அனைத்தும் பதிவு செய்து உள்ளது வருங்கால தலைமுறையினருக்கு நிச்சயம் பயன்படும்.

ஊதிய குழுவில் அரசு ஊழியர் சங்கம் வைத்த கோரிக்கைகள் அனைத்தும் பட்டியலிட்டு உள்ளது ஊழியர்கள் மத்தியில் வரவேற்பு பெறுவது நிச்சயம் .

கடந்த காலங்களில் நாம் நடத்திய இயக்கங்கள் பெற்ற வெற்றிகள் தொடர்பாக தொடர்ந்து கட்டுரையாக வரவேண்டும் என விரும்புகிறோம்

பொதுவாக இந்த இதழ் மிகவும் பயன் உள்ள பொக்கிஷமாக மாறும் என கூறி வாழ்த்துகிறேன்.

- **புருஷோத்தமன்**, முன்னாள் மாநில துணை தலைவர், தநாஅஊச.

ஜூன் 2017 ஊதியமாற்ற சிறப்பிதழில் அட்டை படங்கள் ஆவேச பேச்சு, சந்திப்புகள் அனைத்தும் உணர்ச்சிமிக்கதாக இருந்தது. ஒரு குடையின் கவலை கவிதை, 19 கார்டூன் கருத்துக்கள் இன்றைய எதார்த்தத்தை விளக்கியது. அரசு ஊழியரின் நெடுந்துயர்கள் கருத்து செரிவான கட்டுரை மொத்தத்தில் இந்த இதழ் படித்து பாதுகாக்க வேண்டிய பெட்டகம்.

- **சி.பாலசுப்ரமணியன்**, நாகப்பட்டினம்

அரசு ஊழியர் ஜூன் 2017- மாத இதழ் அஞ்சல் வழியே கிடைக்கப்பெற்றது. வழக்கமான இதழ்தானே நேரமிருக்கும்பொழுது சற்று திப்பிப் பார்ப்போம் என வைத்துவிட்டேன். இரவு பல்வேறு பணிகளை முடித்தபின் அரசு ஊழியர் இதழை எடுத்து பார்த்தபோதே, உண்மையைச் சொல்லுவதென்றால்... சொக்கிப்போனேன்!

வரிக்கு வரி , பக்கத்திற்கு பக்கம், எதனையும் எளிதாக கடந்துபோக இயலவில்லை. எனினும் மேலோட்டமாக பார்த்த பொழுதே, நாம் மட்டுமல்ல, நமது நிர்வாகிகள் மட்டுமல்ல, நம் உறுப்பினர்கள் மட்டுமல்ல, நம்மை விமர்சிப்பவர்கள் மட்டுமல்ல, தமிழகத்தில் வசிக்கும் அனைவரும் படிக்க வேண்டிய, பாதுகாக்க வேண்டிய பொக்கிஷம் இது என்பதை உணர்ந்தேன்.

அட்டைப்பட கார்ட்டுனே அசத்தலாக, அரசை எச்சரிப்பதாக இருந்தது. அடுத்த பக்கத்தில் ஒரு குடையின் கவலையாக வந்துள்ள சீனக் கவிதை பலமுறை படித்திருந்தாலும், இன்று ஒரு புது உத்வேகத்தை தந்தது.

பொதுச்செயலாளர் ஏன் இந்த சிறப்பிதழ் என்பது குறித்து எழுதியுள்ள கடிதம், நான் முன்பு குறிப்பிட்டதைப்போல், அரசு ஊழியரல்லா தோரும் அறியவேண்டிய அவசியத்தை உணர்த்துவதாகவும், நடைபெற்ற போராட்டம் எத்தகைய சூழலில் நடத்தப்பட்டது, அதன் அத்தியாவசிய தேவை, அது ஏற்படுத்திய பாதிப்பு என்ன என்பதை சரியாக அனைவரும் புரிந்துகொள்ள வாய்ப்பளிப்பதாக உள்ளது. அதிலும் குறிப்பாக “அரசு ஊழியர்களுக்கு தங்கள் வாழ்கையை நடத்திச் செல்லத் தேவையான, கவுரவமான ஊதியம் மறுக்கப்படுவதன் மூலம், கையூட்டு, லஞ்சம் பெறுதல் போன்ற இழிச்செயல்களுக்கு அவர்கள் உந்தப்படும் நிலை ஏற்படும் என்பதையும், அதன் மூலம் சாமான்ய மக்கள் அரசின் உதவிகள் பெறுவது முதல், உரிமைகள் பெறுவது

வரை மிகுந்த இடர்பாடுகள் எழுந்து சமூகச் சீர்கேடுகள் உருவாகும் " என்பதை சுட்டிக்காடும் துணிச்சல் அரசு ஊழியர் சங்கத்திற்கு மட்டுமே உள்ளது என்பதை நினைத்து பெருமிதம் அடைவ தாக இருந்தது. அரசு ஊழியர் பெறும் ஊதிய மாற்றம், சமூகத்தில் என்ன என்ன நல்ல விளைவுகள் தருகின்றது என்பதை என்னைப் போன்ற பாமரனும் புரிந்துகொள்ளும் வண்ணம் உள்ளது.

"ஊதிய மாற்றப் பரிந்துரைகளும், அரசு ஊழியர்ன் நெடுந் துயர்களும்! " வரலாற்றுப் பெட்டகம். முழுமையாக இன்னும் படிக்க வில்லை. நின்று நிதானமாக படிக்க வேண்டும். முதல் நான்கு பக்கங்களே வரலாற்றின் கடந்த கால பக்கங்களில் தவழ்வதாக உள்ளது. சமீப காலங்களில் (முன்பு சொல்லப்பட்டவைதான் எனினும்) இப்படி ஓர் ஆவனம் வரவில்லை என்ற குறையை போக்குவதாக அமைந்துள்ளது. அனைவரும் படித்து பாதுகாக்க வேண்டியது. குறிப்பாக நிர்வாகிகள் முழுமையாக படித்தாலே, களப்பணிக்கு செல்லும்போது / அலுவலகங் களுக்குச் செல்லும்போது / டீக்கடைகளில் நாம் விமர்சிக்கப்படும் பொழுது சரியான பதிலடி கொடுக்க ஏதுவாக இருக்கும்.

ஆங்காங்கு, பக்கத்திற்கு பக்கம் அள்ளித் தெளிக்கப்பட்டுள்ள கார்டூன்கள் மிகவும் சிறப் பாக உள்ளது. அனைத்துமே சிறப்பாக இருந்தா லும் கடைசியாக பஞ்ச் டயலாக்காக வந்துள்ள " அண்ணே, பின்னாடி பாருங்க, நான் தனியாளு இல்லன்னு தெரியும். கொஞ்சம் உற்றுப் பாருங்க, இது தானா சேர்ந்த கூட்டம்னு புரியும். பாக்க றீங்களா.... பாக்கறீங்களா... ஓங்கிக் குத்துனா, அஞ்சு வருசத்துக்கு அட்ரஸ் இல்லாம போய்டு வீங்க... பாக்க்கறீங்களா...?" அற்புதம்.

மொத்தத்தில் ஒரு வெகு சிறப்பான இதழை கொடுத்துள்ள மாநில மையத்திற்கும், ஆசிரியர் குழுவிற்கு, மெருகேற்றிய கார்ட்டூன் குழுவிற்கும் இதயம் நிறைந்த பாராட்டுக்கள் மற்றும் நன்றிகள்!

- **ஏ.ட்டி.அன்பழகன்**, நாகை

**ஜூ**ன் மாத சிறப்பிதழ் படித்தேன். பேருவகை கொண்டேன். அரசு ஊழியர்களின் நிலுவைக் கோரிக்கைகள் குறித்து அட்டைப் படம் மிக அருமை. சுருங்கக் கூறி அநேக விசயங்களை புரிய வைத்தது.

சூடா ஒரு கோப்பை சூப் - ஒரு குடையின் கவலை கவிதை அருமையிலும் அருமை. என்னைப் பொறுத்தளவில் குடை என்ற இடத்தில் அரசு ஊழியர் சங்கம் என்பதைப் பொருத்திப் பார்க்கிறேன். முற்றாக பொருந்துகிறது.

ஆசிரியர் குழுவின் தலையங்கம் அனுபவச் செறிவு, யதார்த்த நிலைமைகளின் தொகுப்பு. சூலை 2017க்குள் ஊதிய மாற்றம் உள்ளிட்ட கோரிக்கைகள் குறித்து முடிவு எடுப்பதாக உறுதி அளிக்கப்பட்டுள்ளதென அதில் தெரிவிக்கப்பட் டுள்ளது. அரசு ஊழியர்கள் மட்டுமின்றி ஓயவூதி யர்களும் அவ்வறிப்பை ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள்.

ஊதிய மாற்றப் பரிந்துரைகளும் அரசு ஊழியரின் நெடுந்துயர்களும் சிறப்புக் கட்டுரை. போற்றி பாதுகாக்கப்பட வேண்டிய சிறந்ததொரு ஆவணத் தொகுப்பாகும். இவைகளை தயாரிக்க பாடுபட்ட அனைத்து நல் உள்ளங்களுக்கும் இதயம் கனிந்த நன்றி. மொத்தத்தில் இதழ் சிறப்பாக உள்ளது.

- **மு.சலீம் முகம்மது மீரான்**, தென்காசி

**ஆ**சிரியருக்கு வணக்கம். நான் வருவாய்த் துறையில் கடைநிலை ஊழியராக பணிபுரிகிறேன். அரசு ஊழியர் மாத இதழ் படித்தேன். மிகவும் பிடித்துள்ளது. நல்ல விஷயங்கள் உள்ளன. ஒவ்வொரு அரசு ஊழியரும் படித்து தெரிந்து கொள்ள வேண்டிய தகவல்கள் உள்ளன. அதேசமயம் அரசு ஊழியர்களின் சந்தேகங்களுக்கு பதில் கூறும் விதமாக கேள்வி - பதில் பகுதி வெளியிட வேண்டுகிறேன். மேலும், அரசு ஊழியர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளையும் வெளியிடலாம்.

- **ஜெ.கெஜேந்திரன்**, புஷ்பகிரி

**க**டந்த மாத அட்டைப்படம் ஜோர். அரசு ஊழியர்களின் தான் அரசின் அச்சாணி என்பது தெளிவானது. கார்ட்டூன் போட்டு அசத்தி விட்டீர்கள். அந்தப் படங்களை தயாரித்த தோழருக்கு என் இரு கரம் கூப்பி வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். மற்றபடி பிரசுரிக்கப் பட்டுள்ள அனைத்து தகவல்களும் மிகவும் சிறப்பாக இருந்தது. இதுவரை இல்லாத அளவுக்கு ஊதிய மாற்ற சிறப்பிதழ் என்ற ஒன்றை அரசு ஊழியரில் இதழில் பிரசுரித்து அனைவரது கையிலும் இருக்கும்வண்ணம் செய்து விட்டீர்கள். அனைத்து அரசு ஊழியர்களின் கையிலும் இருக்க வேண்டிய அற்புத பொக்கிஷம் இது. தொடரட்டும் உங்கள் பணி.

- **ரா.தட்சிணாமூர்த்தி**, கடலூர்

# ஜிஎஸ்டி எனும் மாநில உரிமை பறிப்பும் சிறு, குறு தொழில்கள் ஒழிப்பும்!

"ஒரேநாடு - ஒரே வரி." இது GST எனப்படும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம் முன் வைக்கும் கோஷம். இது முதலில் நமது அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரான கோஷமாகும்.

இந்தியா ஒரே நாடு என்பதைவிட பல பிரதேசங்களின் கூட்டு (Indian Union) என்றுதான் இந்திய அரசியமைப்பு சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. இந்த வகையில் GSTயில் முன்வைக்கப்படும் கோஷம் கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானது ஆகும்.

மேலும் ஒரே வரி என்பது ஒரே வரி விகிதம், ஒரே மாதிரியான வரிச் சட்டம் என்ற பொருளில் எடுத்துக் கொள்ளலாம். இந்த வகையிலும் இவ்விரு பொருள்படும், அம்சங்களும் இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிரானவை ஆகும். பொதுவாக வரி என்பது ஒரு நாட்டின் குடிமகன் ஈட்டும் வருவாய், பொருள், செய்யும் தொழில், பெறும் சேவை ஆகியவற்றில் (அ) ஆகியவற்றின் பொருட்டு ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தினை அரசுக்கு செலுத்துவது ஆகும். இந்த வகையில் சில வகை வரிகள் மத்தியப் பட்டியலிலும், சிலவகை வரிகள் மாநிலப் பட்டியலிலும் அரசியல் அமைப்பு சட்டத்தின்படி வகைப்படுத்தப்பட்டுள்ளன. (உதாரணத்திற்கு) வருமான வரி, கலால் வரி, சேவை வரி போன்றவை மத்தியப் பட்டியலிலும், விற்பனை வரி, சொகுசு வரி, பொழுதுபோக்கு வரி, நுழைவு வரி, தொழில் வரி, நிலவரி போன்றவை மாநிலப் பட்டியலிலும் உள்ளன. அத்துடன் வரிகளைப் பொறுத்தவரையில் நேர்முக வரி, மறைமுக வரி என இருவகைப்படுத்தப்படும், இவ்வரிகளை வருமானத்திற்கான வரியை நேர்முக வரிக்கும், விற்பனை வரி போன்றவை மறைமுக வரிக்கும் உதாரணமாகக் கொள்ளலாம். இந்த வகையில் வருமான வரி போன்ற நேர்முக வரிகள் அனைத்தும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன. இதர மறைமுக வரி இனங்களில் இந்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள மத்திய கலால் வரி, சுங்க வரி, சேவை வரி மற்றும் மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள விற்பனை வரி, சொகுசு வரி, பொழுதுபோக்கு வரி, நுழைவு வரி, பந்தய வரி, விளம்பர வரி ஆகியவற்றையும் ஒருங்கிணைத்து சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம் என்ற புதிய வரிச் சட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது. இத்தனை வரிகளையும் ஒரேவரியாக மாற்றுவது நல்லது தானே என்று நினைக்கலாம். இது மேலோட்டமாக பார்க்கும்போது சரியாகத் தோன்றும். ஆனால் சற்றுஆழமாக சிந்தித்துப் பார்த்தால், இதுவரை மாநில அரசின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்த... மாநில அரசு நினைத்தால் சில பொருட்களுக்கு வரியை கூட்டவும், குறைக்கவும், விலக்கு அளிக்கவும் அதிகாரம் பெற்ற இவ்வகை வரிகள் அனைத்தும் மாநில அரசின் "உரிமைகளிலிருந்து விலகிச் செல்கின்றன", இன்னும் அப்பட்டமாகச் சொல்வதென்றால் மாநிலத்தின் அதிகாரங்கள் முழுவதுமாக மத்திய அரசால் பறிக்கப்பட்டுள்ளன. இதில் என்ன கொடுமை என்றால் ஒரு மாநில அரசின் மொத்த வருவாயில் 70% மாநில அரசின் அதிகாரத்தின் கீழ் உள்ள விற்பனை வரியின் மூலம்தான் வருகிறது. இது எதிர்காலத்தில் இவ்வருவாயை எதிர்பார்த்து மத்திய அரசிடம் மாநிலங்கள் கையேந்தி நிற்க வைக்கும். மேலும் மாநில நலனுக்கு உகந்த வகையில் ஒரு பொருளுக்கு வரிவிலக்கு அளிக்கவோ அல்லது வரியை கூட்டவோ, குறைக்கவோ இயலாது. இனிமேல் ஒரு பொருளுக்கு வரியை விதித்தல் மற்றும் கூட்டுதல், குறைத்தல் என எல்லாவற்றிக்கும் GST கவுன்சில்தான் முடிவு எடுக்கும். இது அப்பட்டமாக மாநில உரிமைகளை பறிப்பது ஆகும். GST கவுன்சில் என்பது நம் நாட்டில் உள்ள மாநிலங்கள் 29 - யூனியன் பிரதேசங்கள் - 2, மத்தியஅரசு - 1 ஆக 31 உறுப்பினர்கள் அடங்கிய அமைப்பு இது ஆகும். இதில் வாக்குரிமை என்பது 29 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்கள் ஆகியவற்றிற்கு மூன்றில் இரண்டு பங்கு அதாவது 66.66%ம், மத்திய அரசுக்கு மூன்றில் ஒரு பங்கு அதாவது 33.33%மும் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் 75% பெற்றால் மட்டுமே மெஜாரிட்டி முடிவு என்ற அடிப்படையில் விவாதத்திற்கு தீர்வு கிடைக்கும். ஆக எந்த ஒரு விஷயம் தீர்மானிப்பதற்கும் மத்திய அரசு நினைத்தால் மட்டுமே முடியும் என்ற " வீட்டோ அதிகாரம்" மத்திய அரசுக்கு GST கவுன்சிலில் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் GST வரிவிதிப்பை நடைமுறைப்படுத்த GSTN என்ற கணினிமய அமைப்பு ஒன்று சுதந்திர அமைப்பாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இந்த GSTNதான் கணினி மயத்தை முழுமையாக தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும். இந்த அமைப்பு மூலம் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 500 இலட்சம் கோடி அளவிற்கு பணப்பரிவர்த்தனை நடக்க உள்ளது. ஆனால் இந்த அமைப்பை நிர்வகிக்க ICICI வங்கி, HDFC, LIC Housing finance போன்ற தனியார் நிறுவனங்கள் 51% பங்கும் அரசு சார்பாக 49% பங்கும் கொண்ட அமைப்பாக உருவாக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு நிறுவனங்கள், முதலாளிகள் ஏகபோக உரிமை கொண்டாடும் மேற்கண்ட இந்நிறுவனங்கள் பெரும்பான்மையாக உள்ள GSTN அமைப்பு எவ்வளவு தூரம்

இலாபம் இல்லாதநோக்கில் இயங்கும்? நாட்டிற்கு நன்மை பயக்கும் அமைப்பாக செயல்படுத்தப்படும்? என்பவைகள் மிகப்பெரிய கேள்விக்குறிகள். ஏனென்றால் வரியை வசூலிக்கும் உரிமை GSTயின் மூலம் தனியார் கைக்கு சென்று விடுகிறது என்பதை நாம் புரிந்துக்கொள்ள வேண்டியுள்ளது. மேலும் மதிப்பிட முடியாத அளவிற்கு நடக்கும் பணப்பரிவர்த்தனையில் ஏதாவது தவறு நடந்தால் எப்படி கண்டறிவது என்பதுவும் பரிசீலிக்க வேண்டிய ஒன்றாகும்.

அடுத்து, இதுவரை GST அமுல்படுத்திய நாடுகளின் நிலைமையை பார்ப்போம். இவ்வரி முறையை முதலில் அறிமுகப்படுத்தியவை ஐரோப்பிய நாடுகள்தாம். இவற்றில் பிரான்ஸ், ஜெர்மனி தவிர மற்ற அனைத்து நாடுகளிலும் GST அமல்படுத்தப்பட்டதன் மூலம் மிகபெரிய நிதி நெருக்கடி, சிறு, குறு தொழிகள் பாதிப்பு, இதனால் வேலை இழப்பு, பொருளாதார குளறுபடிகள் என கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டதன் தொடர்ச்சியாக வரிவிகிதத்தை மாற்றி அமைத்தப் பின்பு தற்போது நிலைமை ஓரளவு பரவாயில்லை. இத்தாலி, மற்றும் பிரேசில் போன்ற தென் அமெரிக்க நாடுகளில் கடுமையான நிதிப் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இவற்றில் ஓரளவு தாக்குபிடித்துள்ள நாடு கனடாதான். இங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள Dual Taxation Systemதான் நமது நாட்டில் மூன்று வரி விதிப்பாக அதாவது SGST(State Goods and Services Tax Act), CGST (Central Goods Services Tax Act) , IGST (Integrated Goods and Services Tax Act) என மூன்று வரிமுறையாக நம் நாட்டில் அமுல்படுத்தப்பட உள்ளது. இதுவே ஒரே வரி முறை என்று சொல்வதற்கு மாறாக இருக்கிறது. என்றாலும்கூட கனடா அரசாங்கம் ஒரு மக்கள் சேமநல அரசாங்கம் (welfare state)ஆக உள்ளது. அங்கு கல்வி, மருத்துவம் என மக்கள் நலன் சார்ந்த அனைத்தும் முழுமையாக இலவசமாக வழங்கப்படுகிறது. முழுவதும் கணினிமயம், ஊழல் இல்லா தேசமாக அந்நாடு உள்ளது. ஆனால் ஊழல் மலிந்த இத்தேசத்தில், கணினிமயத்தை தாண்டி கணினிக்கு தேவையான மின்சாரமே இல்லாத பல ஊர்கள் இருக்கும் நாம் நாட்டில் எவ்வளவு தூரம் இவையெல்லாம் சாத்தியம் என்பதை வருங்காலம்தான் பதில் சொல்லும். மலேசியா நாட்டில் இவ்வரிமுறை அமுல்படுத்தப்பட்டுள்ள 4 ஆண்டுகளில் எல்லைகளற்ற வர்த்தகம் என்ற முறையில் எங்கிருந்தும் யாரும் பொருள் வாங்கலாம் என்ற அடிப்படையில் பெரிய நிறுவனங்கள் தயாரிக்கும் பொருள்கள் பொதுவாகவே விலையை குறைத்து விற்க வாய்ப்புண்டு என்ற அடிப்படையில் உள்ளூரில் உள்ள சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் அனைத்தும் மூடபட்டுவிட்டன என்பதுவும் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று ஆக உள்ளது. இதேநிலைமை நமது நாட்டிலும் ஏற்பட வாய்ப்புள்ளது.



“மாஸ்டர் ஸ்ட்ராங்கா ஒரு டீ.”

“சிங்கிள் டீ பத்து ரூபா சார்.”

“ஏம்பா நான் இஞ்சி டீ கேக்கல
சாதா டீ தான் கேட்டேன்.”

“இது இஞ்சி டீயோ, சாதா டீயோ
இல்ல சார், ஜிஎஸ்டி!”

- *குணா*

மேலும் மாநிலங்களில் உள்ள வணிகவரித் துறைகள் அனைத்தும் கணினிமயம், புதிய வரி முறை என்ற நோக்கில் துறை மறு சீரமைப்பு, பணியமைப்பு மாற்றம், என்ற வகையில் பல்லாயிரக்கணக்கான பணியிடங்கள் பறிக்கப்படும் அபாயமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய வரிக்கொள்கை என்பது சமீபத்தில் நம் நாட்டில் நடைபெற்றுவரும் இந்து மதம் மட்டுமே இந்நாட்டில் இருக்க வேண்டும், இந்திமொழி மட்டுமே பேச வேண்டும், கலாச்சாரம், பண்பாடு என எல்லாவற்றிலும் ஒரே நாடாக இருக்க வேண்டும் என்ற நோக்கில் அதிகாரங்கள் அனைத்தும் ஒற்றை புள்ளியில் குவிக்கும் பாதையில் பயணிக்கும் ஒருசெயலாகவே GST சட்ட அமுலாக்கத்தை பார்க்க வேண்டியுள்ளது .

இப்படிப்பட்ட ஒரு வரிமுறையை அமுல்படுத்திட நமது சுதந்திரத்திற்குப் பிறகு மிக பெரிய விழாவை ஜூன் 30ம் தேதி நள்ளிரவு 12 மணியளவில் பாராளுமன்றம் தனது மைய மண்டபத்தில் நடத்தியுள்ளது.

ஆக GST பிரச்சினையின் துவக்கமா? காலம்தான் பதில் சொல்லும். பொறுத்திருந்து பார்ப்போம்.

**- என்.ஜனார்த்தனன்**

இரத்ததானம் செய்வோம்!
உயிர்களைக் காப்போம்!

# சிவம் பேசினால் சவமும் எழும்...!



**வ**ரலாறு திருத்தப்பட்டு வரும் காலமிது. மகாத்மா காந்தி கொல்லப்பட்டதை இயற்கை மரணமாகச் சித்தரித்தும் மகாத்மாவைக் கொன்ற நாதுராம் கோட்சேவை தேசப் பற்றாளன் என்றும் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் பாடப் புத்தகங்கள்

மூலமாக பிஞ்சு உள்ளங்களில் நச்சு விதைகளை விதைத்து வருவது கண்கூடு.

இந்நிலையில் 'மறந்து கொண்டேயிருப்பது மக்களின் இயல்பு... நினைவுபடுத்திக் கொண்டே யிருப்பது நமது கடமை' எனும் அடிப்படையில் இந்தியச் சுதந்திரப் போரில் ஆகுதியான ஆளுமைகளை நினைவுகூர்தல் அவசியம்.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுள் முக்கிய ஆளுமையாய் விளங்கியவர் களுள் சுப்பிரமணிய சிவா குறிப்பிடத்தக்கவர் ஆவார். அரசியலையும் ஆன்மீகத்தையும் இணைத்து விடுதலைக்காக அவர் போராடினார். தமிழக மக்களுக்கு விடுதலைத் தாகம் ஏற்படச் செய்த சிறந்த மேடைப்பேச்சாளர் மற்றும் சிறந்த இதழாளர்; 1913-ல் 'ஞானபாநு' இதழை நடத்தி னார். விடுதலைப்போராட்ட வீரர் வ.உ.சிதம்பர னாருடனும், மகாகவி பாரதியாருடனும் நெருங்கிப் பழகியவர். இவர் 'வீரமுரசு' எனப் புகழப்பட்டார்.

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டுவில் 1884-ம் ஆண்டு அக்டோபர் 4-ம் நாள் 'சிவம்' என்றும், 'சிவா' என்றும் அழைக்கப்பட்ட சுப்பிரமணிய சிவா பிறந்தார். இவர் தந்தையார் ராஜம் ஐயர், தாயார் நாகம்மாள்(நாகலட்சுமி). பெற்றோர் இட்ட பெயர் சுப்பராமன். இவருக்கு ஞானாம்பாள், தைலாம்பாளென்ற இரு சகோதரி களும், வைத்தியநாதன் என்ற ஒரு சகோதரரும் இருந்தனர். இவர் 12 வயது வரை மதுரையில் இருந்தார். கோவை புனித மைக்கேல்ஸ் கல்லூரி யில் படித்தார். பின்னர், வறுமை காரணமாக திருவனந்தபுரம் சென்று அங்கு இலவசமாக உணவு படைக்கும் ஊட்டுப்புறையில் உணவருந்திக் கொண்டே, பட்ட மேற்படிப்பு படித்தார். 1899-ல் மீனாட்சியம்மை என்பவரைத் திருமணம் செய்துகொண்டார்.

1902-ல் திருவனந்தபுரத்திலுள்ள கொட்டாரக் கரையில் நாயர் வகுப்பைச் சேர்ந்த சதானந்த சுவாமிகள் என்ற ராஜயோகியைச் சந்தித்து, அவரிடம் சிலகாலம் ராஜயோகம் பயின்றார். 1906-ல் சிவாவின் தந்தை மறைவெய்தினார்.

1906-ல் ஆங்கிலேய அதிகாரி கர்சான் பிரபு, வங்கத்தை மதத்தின் அடிப்படையில் இரண்டாகப் பிரித்தார். இந்த பிரிவினைக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. சுதேச உணர்வு மேலோங்கியது. எங்கும் 'வந்தேமாதரம்' என்னும் முழக்கங்கள் எழுந்தன.

1906-07-ல் திருவனந்தபுரத்தில் 'தர்ம பரிபாலன சமாஜம் அமைப்பை, சுப்பிரமணிய சிவா உருவாக்கினார், இளைஞர்களை கூட்டுவித்துச் சொற்பொழிவுகளை நிகழ்த்தி, தேசபக்தி ஊட்டும்

**சுப்பிரமணிய சிவா**
**நினைவு நாள் - ஜூலை 23**

பணியில் ஈடுபட்டார்.அரசாட்சிக்கு எதிராக இவரின் செயல்பாடுகள் அமைந்ததால், இவர் திருவனந்தபுரத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். இதன்பிறகு சுப்பிரமணிய சிவா கால் நடையாகவே ஊர் ஊராய்ச் சென்று தேசிய பிரச்சாரம் செய்ய முற்பட்டார்.

தூத்துக்குடிக்கு வந்தபொழுது தூத்துக்குடியில் வழக்குரைஞராக இருந்த ஒட்டப்பிடாரம் வ. உ.சிதம்பரம் பிள்ளை, சுதேசிக் கப்பல் கம்பெனியைத் தொடங்கினார். இக்காலத்தில் சிதம்பரனாருக்கும் சுப்பிரமணிய சிவாவுக்கும் உளமார்ந்த நட்பு ஏற்பட்டது. இவர்களின் சுதேச உணர்வைத் தன் ‘சுதேச கீதங்களால்’ இவர்களின் நண்பரான பாரதியார் தூண்டிவிட்டார். 1908-ல் சிதம்பரனாரும், சிவாவும் இணைந்து நெல்லைச் சீமையில் சுற்றுப்பயணம் செய்து தேசிய பரப்புரை செய்தனர். 12.3.1908-ல் சுப்பிரமணிய சிவா இந்திய சுதந்திரம் குறித்த பரப்புரையில் ஈடுபட்டதை ராஜத்துரோகக் குற்றம் புரிந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர், 2.11.1912ல் விடுதலையானார்.

பிறகு சுப்பிர மணிய சிவா, சென்னையில் குடியேறி “ஞானபாநு” என்ற மாத இதழைத் தொடங்கினார். இதற்கிடையில் 15.5.1915-ல் சிவாவின் மனைவி மீனாட்சி மரணமடைந்தார். பல்வேறு சூழ்நிலை காரணமாக, “ஞானபாநு” இதழ் நின்றதன் பின்பு, 1916-ல் ‘பிரபஞ்ச மித்திரன்’ என்ற வார இதழை அரம்பித்து சிலகாலம் நடத்தினார். இதில் ‘நாரதர்’ என்ற புனைப்பெயரில், சுப்பிரமணிய சிவா தனது கட்டுரைகளை எழுதிவந்தார். சுமார் இருபது நூல்களுக்கு மேலாக எழுதினார்.

1920-ல் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்குப் பிரதிநிதியாகச் சென்றார்.

1921-ல் துறவி போன்று காவியுடை அணியத் தொடங்கினார். “ஸ்வதந்ரானந்தர்” என்ற பெயரையும் சூட்டிக்கொண்டார்.பாரத மாதாவுக்குக் கோயில் ஒன்று கட்டி முடிக்கத் திட்டம் வகுத்தார். 17.11.1921-ல் இரண்டாவது முறையாக, ராஜத்துரோகக் குற்றத்துக்காகச் சிவாவின் மீது, ஆங்கிலேய அரசு வழக்குத் தொடுத்தது. இதில், சுப்பிரமணிய சிவாவுக்கு, இரண்டரை ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. திருச்சி சிறையில் அடைக்கப்பட்ட அவர் அங்கு, தொழுநோய்வாய்ப்பட்டு அவதிபட்டார். படுத்த படுக்கையாகிவிட்ட நிலையில் 12.1.1922-ல் விடுதலையானார்.

விடுதலையான சிவா திரும்பவும் சென்னைக்கு வந்து, சில நாட்கள் தங்கினார். உடல்நிலை சற்று தேறியதும், திரும்பவும் அரசியல் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள ஆரம்பித்தார். 1923-ம் ஆண்டு தொடக்கத்தில் தருமபுரி, கோவை, பாப்பாரப் பட்டி முதலான ஊர்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். பாப்பாரப்பட்டியில் பாரதமாதா கோயிலுக்கான இடத்தைத் தேர்ந்தெடுத்தார். அவ்வூரில் நிலம் பெற்று அதற்கு “பாரதபுரம்” என்று பெயர் சூட்டினார். கோயிலுக்கான அடிக்கல் நாட்டு விழாவைச் சித்ரஞ்சன்தாசைக்கொண்டு நடத்தினார். 1924-ல் காசியில் வசித்து வந்த இவரது தாயார் காலமானார் . இவருக்கு ஏற்பட்டிருந்த தொழுநோயைக் காரணம் காட்டி, அவர் ரயில் பயணம் செய்ய ஆங்கில அரசு தடைவிதித்தது.

பின்னர் 23.7.1925 வியாழக்கிழமை காலை ஐந்து மணிக்கு, தம்முடைய நாற்பத்தோராவது வயதில் சிவா மறைந்தார். சுப்பிரமணிய சிவா, “மோட்ச சாதனை ரகசியம்”,”ஸ்ரீ ஸ்வாமி விவேகானந்தர் ஆத்மஞான ரகசியம்”,”அருள் மொழிகள்”, “வேதாந்த ரகஸ்யம்”,”ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்ச வைபவம்,” ஞானாம்ருத மென்னும் பிரஹ்மானந்த சம்பாஷணை”, ”சச்சிதானந்த சிவம்,” “பகவத்கீதா சங்கிலகம்,” “சங்கர விஜயம்”, “ராமானுஜ விஜயம்”,”சிவாஜி நாடகம்”, “தேசிங்குராஜன் நாடகம்”, “நளின சுந்தரி (அ) நாகரிகத்தின் தடபுடல்” போன்ற படைப்புகளை படைத்துள்ளார்.

சுதந்திரப் போராட்ட காலங்களில் சிவாவின் பரப்புரை பிரசித்தி பெற்றவை. ஆஜானுபாகுவான உடற்கட்டுடன் இருந்த சுப்ரமணிய சிவா மேடைகளில் தமது எழுச்சியுரையால் மக்களைக் கிளர்ந்தெழச் செய்வார். எனவே இவருக்கு ’சிவம் பேசினால் சவமும் எழும்’ எனும் புகழ் மாலை சூட்டப்பட்டது.

இந்தியச் சுதந்திரப் போரில் இடையறாது ஈடுபட்டுச் சிறையேகி தொழுநோயாளியாகி மரணத்தைத் தழுவிய சுப்ரமணிய சிவாவின் தியாகம் அழியாப் புகழ் பெற்றது.

**- பெரணமல்லூர் சேகரன்**

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 34வது அமைப்பு தின விழா




### கோவை

6.05.17 அன்று அமைப்பு தின கொடியேற்று விழாவும், வேலை நிறுத்த விளக்க கூட்டமும் நடைபெற்றது. மாநில பொருளாளர் எம்.தங்கராஜ் சிறப்புரையாற்றினார். முன்னதாக 34வது சங்க தினம் கொண்டாடப்பட்டது. AISGEF கொடியை மாநில பொருளாளரும், TNGEA கொடியை மாவட்ட தலைவர் வி.செந்தில் குமாரும் ஏற்றி வைத்தனர். 25 மகளிர் உட்பட 175 பேர் கலந்து கொண்டனர். 8.05.2017அன்று அனைத்து வட்ட கிளைகளிலும் சங்க தினம் கொண்டாடப்பட்டது. 23 இடங்களில் கொடியேற்றி இனிப்பு வழங்கி பேசப்பட்டது. இதில் 125 மகளிர் உட்பட 550 பேர் கலந்து கொண்டனர்.

### திருப்பூர்

உடுமலைப்பேட்டை வட்டக் கிளையில் 6.5.2017 அன்று வட்டக் கிளை தலைவர் ஜி.இராஜேந்திரபூபதி தலைமையில் நகராட்சி அலுவலகம், நெடுஞ்சாலைத் துறை, உதவி தொடக்கக் கல்வி அலுவலர் அலுவலகம், பட்டு வளர்ச்சித் துறை, பொதுப்பணித் துறை, அரசு மருத்துவமனை, நீதிமன்றம், வட்டாட்சியர் அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலம், சமூக நலத்துறை, குடிமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், ஆரம்ப சுகாதார நிடிலயம், பெதப்பம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம், உதவி தொடக்கக்கல்வி அலுவலகம் என 16 இடங்களில் கொடியேற்றப்பட்டது. இதில் மாவட்ட, வட்டக் கிளை நிர்வாகிகள் பங்கேற்று உரையாற்றினர். ஏராளமான ஊழியர்கள் பங்கேற்றனர்.

### தருமபுரி

கொடியேற்று விழா தருமபுரி மாவட்டம் முழுவதும் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற அமைப்பு தின விழாவில் மாவட்டச் செயலாளர் ஏ.சேகர்,



மாவட்ட நிர்வாகிகள் எம்.சிவப்பிரகாசம், சி.காவேரி ஆகியோர் பேசினர். AISGEF கொடியை மாவட்ட துணைத் தலைவர் எம்.சிவப்பிரகாசமும், TNGEA சங்கக் கொடியை மாவட்டச் செயலாளர் ஏ.சேகர் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

நல்லம்பள்ளி வட்டாட்சியர் அலுவவகம் முன்பு நடைபெற்ற விழாவில் வட்டத் தலைவர் மோகன்ராஜ், வட்டச்செயலாளர் பிரபாகரன், பென்னாகரத்தில் வட்டத் தலைவர் லட்சுமி, வட்டச் செயலாளர் திம்மராயன், பாலக்கோட்டில் வட்டச் செயலாளர் முனிராஜ், பாப்பிரெட்டிபட்டி யில் வட்டத் தலைவர் சண்முகம், வட்டச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, அரூரில் வட்டத்

தலைவர் சாமிநாதன், வட்டச் செயலாளர் அழகிரி ஆகியோர் உரையாற்றினர்.

**நாகை**

மாவட்ட மைய அலுவலகத்தின் முன்பு கொடியேற்றத்துடன் துவங்கியது. அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் தலைமையில் மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல் அரசு ஊழியர் சங்கக் கொடியையும், முன்னாள் மாநில துணைத் தலைவர் சு.சிவகுமார்



அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனக் கொடியையும் ஏற்றிவைத்து சிறப்புரையாற்றினர். மாவட்டப் பொருளாளர் பா.ராணி, எம்.தமிழ் வாணன், வி.மாரிமுத்து, கே.ராஜூ, ஜி.காளி முத்து, சொ.கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட பல்வேறு சங்கத் தலைவர்கள் நிகழ்வில் பங்கேற்றனர். நாகை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை யில் நாகை வட்டப் பொருளாளர் வி.மாரிமுத்து இரத்ததானம் செய்தார். வட்டத் தலைவர் சி.பாலசுப்பிரமணியன் நன்றி கூறினார்.



தரங்கம்பாடி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு அமைப்பு தினத்தை ஒட்டி அரசு ஊழியர் சங்கக் கொடியேற்றி இனிப்பு வழங்கப்பட்டது.

**காஞ்சிபுரம்**

6.5.2017 மற்றும் 8.5.2017 ஆகிய இரு தினங்களில் அனைத்து வட்டக் கிளைகளிலும் எழுச்சியோடு நடைபெற்றது. மாவட்ட சங்கக் கட்டிடத்தில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்டத் தலைவர் வெ.லெனின் தலைமையிலும் மற்ற பகுதிகளில் மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்போடு நடை பெற்றது. காஞ்சிபுரத்தில் மாவட்டத் தலைவர் வெ.லெனின், உத்திரமேரூர் எஸ்.பரணி மதற்றும் வி.ராஜ்குமார், திருப்பெரும்புதூரில் எஸ்.ரஞ்சித்சிங், மதுராந்தகத்தில் சா.முகம்மது உசேன் மற்றும் எம்.என்.ஸ்ரீராம், செய்யூரில் கே.பூங்குழலி, திருக்கழுகுன்றம், திருப்போரூர் பகுதிகளில் பி.இராமமூர்த்தி, ஆர்.கோவிந்தன் ஆகியோர் பங்கேற்று கொடியேற்றி வைத்தனர். அனைத்து வட்டக் கிளைகளிலும் மொத்தம் 19 அலுவலகங்கள் முன்பு கொடியேற்றப்பட்டது. இதில் 133 பெண் ஊழியர்கள் உட்பட 500 பேர் பங்கேற்றனர்.

**மதுரை**

அரசு இராஜாஜி மருத்துவமனை முன்பு நடைபெற்றது. சங்கத்தின் கொடியை மாவட்டத் தலைவர் முருகன் ஏற்றி வைத்தார். இதில் மாவட்டச் செயலாளர் சு.கிருஷ்ணன், தமிழ்நாடு அரசு மருந்தாளுநர் சங்க மாநில பொதுச் செயலாளர் பால்முருகன் மற்றும் மாவட்ட நிர்வாகிகள், கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**கரூர்**

மாவட்டத்தில் அனைத்து வட்டக் கிளைகளி லும் கொடியேற்றப்பட்டது. தலைமை அலுவல கம், கரூர் 1, கரூர் 2, மண்மங்கலம், அரவக் குறிச்சி, குளித்தலை, கடவூர், கிருஷ்ணராயபுரம் ஆகிய பகுதியில் மொத்தம் 8 இடங்களில் கொடியேற்றப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்டத் தலைவர் மு.மகாவிஷ்ணன், மாவட்டச் செய லாளர் கே.சக்திவேல், மாவட்ட பொருளாளர் பொன்.ஜெயராம், மற்றும் மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர். ❖

மரம் நடுவோம்!
மழை பெறுவோம்!!

# போக்குவரத்து ஊழியர்களுக்கு ஆதரவாக அரசு ஊழியர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்

**போ**க்குவரத்து தொழிலாளர்களின் 7 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி நடைபெற்ற வேலை நிறுத்தத்துக்கு ஆதரவாகவும், பொய்ப் பிரச்சாரம் மூலம் போராட்டத்தை நசுக்க நினைக்கும் தமிழக அரசுக்கு கண்டனம் தெரிவித்தும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் 16.5.2016 அன்று தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### நாகப்பட்டினம்

மாவட்ட மையம் சார்பில் மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல் தலைமையில் 16.05.2017 மதியம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஏ.ட்டி.அன்பழகன் விளக்கவுரையாற்றினார். நாகை தொழிற்சங்க கூட்டமைப்பு தலைவர் சு.சிவகுமார் சிறப்புரையாற்றினார். சீர்காழி வட்டத் தலைவர் எல்.பிரேம்சந்திரன் நன்றி கூறினார். 16 பெண்கள் உட்பட 85 நபர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். மாலை நாகை வட்டாட்சியர் அலுவலக ஆர்ப்பாட்டத்திற்கு வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன் தலைமை தாங்கினார். கீழ்வேளூர், வேதாரண்யம், தரங்கம்பாடி, சீர்காழி, மயிலாடுதுறை, குத்தாலம் ஆகிய வட்டாட்சியர் அலுவலகங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### கிருஷ்ணகிரி

மாவட்டத்தில் ஓசூர், தேன்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி வட்டங்களில் தமிழக அரசை கண்டித்தும் போராடும் போக்குவரத்து ஊழியர்களுக்கு ஆதரவு தெரிவித்தும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றது. மாவட்ட நிர்வாகிகள் பி.சந்திரன், சி.பி.ஜெயராமன், ஆர்.நடராஜன், வி.தேவராஜன், வட்ட நிர்வாகிகள் கே.த்திவேல், வெங்கடேசன், எஸ்.சின்னப்பன் உட்பட வட்ட நிர்வாகிகளும், 43பெண் ஊழியர்கள் உட்பட 174 ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

### திருவள்ளூர்

கும்மிடிப்பூண்டியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டக் கிளை தலைவர் எ.அருள் வளவன் தலைமை தாங்கினார். சங்கத்தின் மாவட்ட இணைச் செயலாளர் ஏ.மணிகண்டன் உட்பட பலர் பேசினர். இதே கோரிக்கைக்காக திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மேலும் எல்லாபுரம், ஊத்துக்கோட்டை, திருத்தணி,



பள்ளிப்பட்டு உள்ளிட்டு மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாச்சியர் அலுவலகத்திலும் போக்குவரத்து தொழிலாளர்களுக்கு ஆதரவாக போராட்டங்கள் நடைபெற்றன.இதில் மாவட்ட செயலாளர் ஜெ.வி.அருள்டேனியேல் உட்பட அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

### தருமபுரி

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்பாட்டம் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் எம்.சுருளிநாதன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் ஏ.சேகர், மாவட்ட துணைத் தலைவர் எம்.யோகராசு, மாவட்ட இணைச் செயலாளர் சி.காவேரி மற்றும் நிர்வாகிகள் சாமிநாதன் ஆகியோர் பேசினர்.

### கரூர்

16.5.2017 அன்று மாவட்டத்தில் கரூர் 1, கரூர் 2, மண்மங்கலம், அரவக்குறிச்சி, குளித்தலை, கடவூர், கிருஷ்ணராயபுரம் ஆகிய பகுதிகளில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்று கண்டன உரையாற்றினர். இதில் 80 பெண் ஊழியர்கள் உட்பட 300 பேர் பங்கேற்றனர்.

### நீலகிரி

உதகை கிளை, குன்னூர், பந்தலூர் மற்றும் கூடலூர் பகுதிகளில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் அரசு ஊழியர் சங்க மாவட்ட நிர்வாகிகளும், துறைவாரி சங்க நிர்வாகிகளும், சிஐடியு தோழர்களும் பங்கேற்று உரையாற்றினர். மொத்தத்தில் 30 பெண் ஊழியர்கள் உட்பட 300

பேர் பங்கேற்றனர்.

### சேலம்

16.5.2017 அன்று மேட்டூர் வருவாய்த் துறை அலுவலகம் முன்பு ஆதரவு ஆர்ப்பாட்டம் வட்டச் செயலாளர் து.சிங்கராயன் தலைமையில் நடைபெற்றது. போக்குவரத்து தொழிலாளர் சங்க நிர்வாகிகள், செம்பான், மல்லிகா அர்ஜுனன், அன்பழகன் மற்றும் துறைவாரி சங்க நிர்வாகிகள் என்.கோபால் ஆகியோர் உரையாற்றினார். வி.இளங்கோ நிறைவுரையாற்றினார். என்.கே.வெற்றிவேல் நன்றி கூறினார்.

### தூத்துக்குடி

போக்குவரத்து ஊழியர்களுக்கு ஆதரவாக தூத்துக்குடி மாவட்டத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்










நடைபெற்றது. மாவட்ட நிர்வாகிகளும், கிளை நிர்வாகிகளும் பங்கேற்று உரையாற்றினர். தூத்துக்குடி, விளாத்திகுளம், சாத்தான்குளம், கோவில்பட்டி ஆகிய பகுதிகளில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் பெண்கள் உட்பட அரசு ஊழியர்கள் பங்கேற்றனர். ❖

# விளக்கக் கூட்டம்

### தருமபுரி

காலவரையற்ற வேலைநிறுத்தம், அரசுடன் நடைபெற்றபேச்சுவார்த்தை போராட்டம் தற்காலிக ஒத்திவைப்பு குறித்து, விளக்கக் கூட்டம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில், சிஐடியு அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் எம்.சுருளிநாதன் தலைமை வகித்தார். மாநில துணைத் தலைவர் சு.பார்த்திபன், மாவட்டச் செயலாளர் ஏ.சேகர், பொருளாளர் கே.புகழேந்தி, மாவட்ட நிர்வாகிகள் எம்.சிவப்பிரகாசம் பி.எஸ்.இளவேனில், ஊரக வளர்ச்சித் துறையின் மணிவண்ணன், சத்துணவு ஊழியர் சங்கத்தின் சி.எம்.நெடுஞ்செழியன் உள்ளிட்ட பலர் கோரிக்கையை விளக்கி பேசினர்.

### காஞ்சிபுரம்

செங்கற்பட்டில் 03-05-2017 அன்று மாலை 5.30 மணியளவில் மாவட்ட அமைப்பாளர் வெ.லெனின் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் சா.முகம்மது உசேன்





வரவேற்புரை நிகழ்த்தினார். துறைவாரி சங்க நிர்வாகிகள் கே.பாபு, டி.கன்னியப்பன், வி.விக்டர் சுரேஷ், என்.ஜெய்சுந்தர், வி.விஜயா, எம்.வேல்முருகன், கே.கன்னியப்பன், கே.பூங்குழலி, எம்.என்.ஸ்ரீராம் ஆகியோர் கருத்துரை வழங்கினர். மாநில செயலாளர் தி.கலைச்செல்வி விளக்கவுரை நிகழ்த்தினார். பி.இராமமூர்த்தி நன்றி கூறினார். இக்கூட்டத்தில் 41 பெண்கள் உட்பட 104 பேர் பங்கேற்றனர். ❖

# துறைவாரி சங்க நிகழ்வுகள்

**தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்**

வருவாய்த்துறை ஊழியர்களுக்கு உயர்ந்தபட்ச ஊதியம் வழங்கிட வேண்டும், வருவாய் நிர்வாக ஆணையரின் செயல்பாட்டில் மாற்றம் வேண்டும், நீண்ட காலமாய் மாவட்ட ஆட்சியராய் பணிபுரிவோர் மாற்றப்பட வேண்டும் உள்ளிட்ட ஐந்து அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி **நாகை** மாவட்ட மையம் சார்பில் 20.06.2017 அன்று



மாவட்டச் செயலாளர் எஸ்.தமிமுன் அன்சாரி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சங்க மாவட்டச் செயற்குழு உறுப்பினர் சபீதா, மாவட்ட இணைச் செயலாளர் டி.இளவரசன், ஓய்வூதியர் சங்க மாவட்டச் செயலாளர் சொ.கிருஷ்ணமூர்த்தி, ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்க மாவட்ட இணைச் செயலாளர் வி.மாரிமுத்து ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டி.அன்பழகன் நிறைவுரையாற்றினார். இறுதியாக நாகை வட்டப் பொருளாளர் அங்கையா நன்றி கூறினார்.

**தருமபுரி**யில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்பாட்டம் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் எஸ்.கே.கணகராஜ் மாவட்டசெயலாளர் வெங்கடேசன் ஆகியோர் பேசினர்.



**திருவாரூர்** மாவட்டத்தில் மத்திய செயற்குழு முடிவின்படி 28.6.2017 அன்று வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களை கண்டித்து 8 வட்டக் கிளைகளில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப் பட்டது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட துணைத் தலைவர் எஸ்.மகேஷ் தலைமையிலும், நன்னிலத்தில் ரவி தலைமை யிலும், குடவாசலில் வட்ட செயலாளர் விக்னேஷ்வரன் தலைமையிலும், வலங்கை மானில் ரெத்தினவெல் தலைமையிலும், மன்னார்குடியில் வட்டத் தலைவர் ஜெயபால் தலைமையிலும், நீடாமங்கலத்தில் வட்டத் தலைவர் அர்கர் தலைமையிலும், திருத்துறைப் பூண்டியில் குணசீலன் தலைமையிலும், கூத்தாநல்லூரில் காகரின் தலைமையிலும் நடைபெற்றது.

மேற்கண்ட ஆர்ப்பாட்டத்தில் மாநில துணைத் தலைவர் வெ.சோமசுந்தரம், எம்.மூர்த்தி, சி.சுந்தரலிங்கம், விஜய்ஆனந்த், என்.வினோத் குமார், எஸ்.கணேஷ், கருணாமூர்த்தி, எஸ்.ஜெகதீசன், வெ.ஞானபிரகாசம், சி.பிரகாஷ், எம்.ராசமாணிக்கம், தெட்சிணாமூர்த்தி, எஸ்.ரவி, வி.ராமகிருஷ்ணன், மனோகரன் எஸ்.மகேஷ், சந்திரசேகரன், கௌதமன், ஆறுமுகம், முத்துகிருஷ்ணன் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர். வி.மதியழகன், என்.வினோத்குமார், மணிவண்ணன், எஸ்.அசோக், தருமையன், செந்தில்குமார் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினார்.

**தூத்துக்குடி** மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் 100 பேர் உட்பட 225 ஊழியர்கள் கலந்து கொண்டனர். மாவட்டத் தலைவர் ஜெகநாதன் தலைமையேற்றார். மாநில துணை தலைவர் குருச்சந்திரன் சிறப்புரை யாற்றினார். மாவட்டச் செயலாளர் செந்தூர்ராஜன், வெங்கடேசன் ஆகியோர் கண்டன உரை யாற்றினர். ஞானராஜ் நன்றி கூறினார்.

**தருமபுரி** மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மாவட்டத் தலைவர் எஸ்.கே.கனகராஜ் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் வெங்கடேசன் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

## தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலைப் பணியாளர்கள் சங்கம்

மக்கள் சொத்தாம் நெடுஞ்சாலைத் துறையினை மக்கள் சேவைத்துறையாக பாதுகாத்திட வேண்டுமென்ற தேசபக்த கடமை கொண்டு, நெடுஞ்சாலைகளை தனியார் மயப்படுத்தும் கொள்ளையை மத்திய,மாநில அரசுகள் கைவிட வேண்டும் நெடுஞ்சாலை பராமரிப்பு பணிகளை தனியார் வசம் வழங்கும் முடிவை ரத்து செய்து அரசே ஏற்று நடத்த வேண்டும் உள்ளிட்டு பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகத்தின் மூன்று முனைகளான கிருஷ்ணகிரி, நீலகிரி, கன்னியாகுமரி ஆகிய பகுதிகளிலிருந்து துவங்கி நீதி கேட்டு மக்கள் சந்திப்பு பிரச்சார இயக்கம் நடைபெற்றது.

**திருவள்ளூரில்** ஜீன்-15 அன்று மக்கள் சந்திப்பு பிரச்சார இயக்கம் நடைபெற்றது. திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டில் துவங்கி திருத்தணி, திருவள்ளூர், பொன்னேரி, கும்மிடிப்பூண்டி ஆகிய மையங் களில் சங்கத்தின் சார்பில் மக்கள் சந்திப்பு பிரச்சாரம் நடைபெற்றது. இதற்கு சங்கத்தின் மாவட்ட செயலாளர் மோகன்தாஸ் தலைமை




தாங்கினார். இதில் மாநில தலைவர் அம்சராஜ், மாநில துணைத் தலைவர்கள் ரவி,சிங்கராயன், மாநில செயற்குழு உறுப்பினர் கோதண்டம், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் ஜெ.வி.அருள்டேனியேல் உட்பட பலர் பேசினர்.

**நாகை** மாவட்டத்தில் 22.6.17 காலை 9.00 மணிக்கு வேதாரண்யம் வட்டாட்சியர் அலுவலகத்தில் துவங்கி, திருக்குவளை, மயிலாடுதுறை ஆகிய ஊர்களில் பல்வேறு இடங்களில் நடைபெற்றது.

இறுதியாக 13 நாட்கள் நடைபெற்ற பிரச்சார இயக்கத்தின் நிறைவுக் கூட்டம், நாகப்பட்டினம் அரசு ஊழியர் சங்கக் கட்டிடம் முன்பு சாலைப்




பணியாளர் சங்க மாவட்டத் தலைவர் எம.செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது.

நாகை வட்டத் தலைவர் கே.தமிழ்ச்செல்வன் வரவேற்புரையாற்றினார். அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல், நாகை தொழிற்சங்கக் கூட்டமைப்பு தலைவர் சு.சிவகுமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சாலைப் பணியாளர் சங்க மாநிலப் பொருளாளர் ஆர்.தமிழ், மாநில துணைத் தலைவர் பி.கோதண்டபாணி, மாநிலச் செயலாளர்கள் ஜி.கோவிந்தன் மற்றும் வி.கணேசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். அரசு ஊழியர் சங்க மாநில தணிக்கையாளர் ஏ.ட்டீ.அன்பழகன் நிறைவுரை யாற்றினார்.

13 நாட்கள் பிரச்சாரத்தில் ஈடுபட்ட மாநில நிர்வாகிகள், கலைக்குழுவினர், ஓட்டுனர் ஆகியோருக்கு அரசு ஊழியர் சங்க நாகை மாவட்ட மையம் சார்பில் சால்வை போர்த்தி பாராட்டப்பட்டது.

முன்னதாக தஞ்சை தியாகி என்.வி.கலைக் குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இறுதியாக மாவட்டப் பொருளாளர் கே.ரவிச்சந்திரன் நன்றி கூறினார்.

## தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கம்

**திருவள்ளூரில்** ஊராட்சி செயலாளர்களுக்கு இளநிலை உதவியாளர்களுக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டும் என வலியுறுத்தி ஜுன் 22 அன்று ஒரு நாள் உண்ணாவித போராட்டம் திருவள்ளூரில் நடைபெற்றது. இதற்கு சங்கத்தின் மாவட்ட தலைவர் அ.சந்தானம் தலைமை தாங்கினார். இதில் மாவட்ட செயலாளர் ஜி.மெல்கிராஜாசிங், பொருளாளர் என்.மகேந்திரன், சங்கத்தின் தணிக்கையாளர் எஸ்.காந்திமதிநாதன், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர்



ஜி.இளங்கோவன் ஆகியோர் பேசினர்.சங்கத்தின் மாநில முன்னாள் பொதுச் செயலாளர் சேகர் நிறையுரையாற்றினார்.

**தருமபுரி**யில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் மா.மணிவண்ணன் தலைமையில் தலைமை வகித்தார். மாநில செயலாளர் ஆர்.ஆறுமுகம் துவக்கி வைத்து பேசினார். மாவட்ட செயலாளர் எஸ்.இளங்குமரன் மாவட்ட துணைத் தலைவர் ஜி.சதீஸ்குமார், பொருளாளர் பி.சங்கர் மற்றும் நிர்வாகிகள் விமலன், ருத்ரைய்யன், கிருஷ்ணமூர்த்தி, இந்துமதி, ஸ்ரீதர் ஆகியோர் கோரிக்கையை விளக்கி பேசினர்.

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்க மாவட்டத் தலைவர் எம். சுருளிநாதன், மாவட்ட செயலாளர் ஏ.சேகர், பட்டு வளர்ச்சித் துறை அலுவலர் சங்க மாநிலத் தலைவர் எம். சிவப்பிரகாசம், மோட்டார் வாகனத் துறை ஊழியர் சங்க மாநில பொருளாளர் கே. புகழேந்தி, வருவாய்த்துறை அலுவலர்கள் சங்க மாவட்ட தலைவர் எஸ்.கே. கனகராஜ், சத்துணவு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் சி.எம்.நெடுஞ்செழியன் உள்ளிட்டோர் வாழ்த்தி பேசினர். அரசு ஊழியர்கள் சங்க மாநில துணைத் தலைவர் எஸ்.தமிழ்ச்செல்வி நிறைவுரை ஆற்றினார். உண்ணாவிரத போராட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறையை சார்ந்த 650 அலுவலர்களும் முழுமையாக விடுப்பு எடுத்து பங்கேற்றனர்.

தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கத்தின் மாநில மாநாட்டின் முடிவிற்கு இணங்க, "மக்களை நோக்கிய பயணம்" என்ற அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத் திலும் ஒரு ஏரியை தூர்வாருவது என்று தீர்மானித்துள்ளனர். அதன்படி திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஊராட்சி ஒன்றியம் திருப்பாச்சூர் பஞ்சாயத்தில் உள்ள பொன்னு பிள்ளை குளத்தை ஜூன்-17 அன்று தூர்வாரும் பணியை துவங்கினர்.

இதற்கு சங்கத்தின் மாவட்ட தலைவர் அ.சந்தானம் தலைமை தாங்கினார். இந்த பணியை தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கத்தின் மாநில செயலாளர் த.பாரி கொடியசைத்து துவக்கி வைத்து பேசினார். இதில் சங்கத்தின் மாவட்ட செயலாளர் ஜி.மெல்கிராஜாசிங், பொருளாளர் என்.மகேந்திரன், சங்கத்தின் மாநில தணிக்கை யாளர் எஸ். காந்திமதிநாதன் உட்பட அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

பொன்னுபிள்ளை குளம் முழுவதும் முட்கள், செடி,கொடிகள் அடர்த்தியாகவும் பறவிகிடந்தன. இதனால் யாருக்கும் பயனற்று கிடந்தது. முட்களை அகற்றி, தூர்வாரி குளத்தின் கரைகளை யும் பலப்படுத்தியுள்ளனர். மழை காலம் வருவதற்கு முன்பாக அதுவும் கடந்த 25- ஆண்டுகளுக்கு பிறகு குளத்தை தூர்வாரியது ஆடு,மாடுகளுக்கு மட்டுமல்லாமல் மழை நீரையும் சேமிக்கலாம். நிலத்தடிநீர் மட்டமானது உயரும். குடிநீரும், விவசாயமும் பாதுகாக்கப் படும் என்பதால் மக்கள் மத்தியில் வரவேற்பும் பாராட்டும் அரசு ஊழியர்களுக்கு குவிந்துள்ளது.

தருமபுரியில் இராமாயன சின்ன அள்ளி ஏரியை சீரமைக்கும் பணி நடைபெற்றது. தமிழகத்தில் வரலாறு காணத வறட்சி நிலவிவருகிறது. மழை பெய்யாத நிலையில் கடும் வறட்சி ஏற்பட்டு குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருகிறது. நீர் ஆதாரத்தைதை மேம்படுத்தும் வகையில் மக்களை நோக்கிய பயணம் என்ற பெயரில் தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் தருமபுரி மாவட்டம் நல்லம் பள்ளிவட்டம் இராமாயன சின்ன அள்ளி ஏரியை சீரமைக்கும் பணி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட தலைவர் எம்.மணிவண்ணன் தலைமை வகித்தார். மாவட்ட ஆட்சியர் கே.விவேகாணந்தன் ஏரியை சீரமைக்கும் பணியை துவக்கி வைத்துது பேசினார். மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட இயக்குனர் எம்.காளிதாசன் சங்க மாநில செயலாளர் ஆர்.ஆறுமுகம் மாவட்ட செயலாளர் எஸ். இளங்குமரன் பொருளாளர் பி.சங்கர் ஆகியோர் சிறப்புரையாற்றினர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் எம்.சுருளிநாதன் மாவட்ட செயலாளர் ஏ.சேகர் சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் சி.எம்.நெடுஞ்செழியன்

நல்லம்பள்ளி வட்டார வளர்ச்சி அல்வலர்கள் கே.அமரவேல் ஜி. ஜெயந்தி ஆகியோர் வாழ்த்தி பேசினர். பின்னர் மரக்கன்றுகளை நடும் நிகழ்ச்சி நடைபெற்றது.


### தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம்

***காஞ்சிபுரம்*** மாவட்டம் திருக்கழுகுன்றம் ஒன்றியத்தில் சங்கத்தின் 32வது ஆண்டு சங்க அமைப்பு தின கொடியேற்று விழாவும் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் குறித்த விளக்கக் கூட்டமும் 19.5.2017 அன்று காலை ஒன்றிய அலுவலகம் முன்பு ஒன்றிய தலைவர் ஜெ.தேவதாஸ் தலைமையில் நடைபெற்றது. அரசு ஊழியர் சங்க வட்டக்கிளை தலைவர் டி.கன்னியப்பன், கே.பாபு, பி.இராமமூர்த்தி, ஆர்.கோவிந்தன் ஆகியோர் உரையாற்றினர். வி.கங்காதரன் நன்றி கூறினார்.

**திருவள்ளூரில்** பணி ஓய்வூதார்களுக்கு 8-வது ஊதிய மாற்றத்திற்கான ஐவர் குழு பரிந்துரையான குறைந்தபட்ச ஓய்வூதியத்தை அமல் படுத்த வேண்டும் என வலியுறுத்தி தமிழ்நாடு சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஓய்வூதியர்கள் சங்க திருவள்ளூர் மாவட்ட குழு சார்பில் ஜீன்-14 அன்று திருவள்ளூர் மீரா திரையரங்கம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஓய்வூதியர்கள் சங்கத்தின் மாவட்ட தலைவர் சுப்பிரமணி தலைமை தாங்கினார்.இதில் மாவட்ட செயலாளர் ராஜேந்திரன்,துணைத் தலைவர்கள் டி.மகேந்திரன், ராமமூர்த்தி,சென்னை மாவட்ட பொறுப்பாளர் சொர்னம்,தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் கோ.இளங்கோ, மாவட்ட செயலாளர் ஜெ.வி.அருள்டேனியேல் உட்பட பலர் பேசினர்.

ஆர்ப்பாட்டத்தின் போது அகவிலைப் படி, மருத்துவப் படி, குடும்ப ஓய்வூதியம் வழங்க வேண்டும், குடும்பநல பாதுகாப்பிற்காக ரூ.50-ஆயிரம் வழங்க வேண்டும்,ஈமக்கிரியை செல விற்கு ரூ.25 ஆயிரம் வழங்க வேண்டும்,



மாதாமாதம் முதல் தேதியில் ஓய்வூதியம் வழங்க வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தப்பட்டன.

### தமிழ்நாடு கருவூல கணக்குத் துறை

கணக்கு நாட்குறைப்பு நடவடிக்கையினை கைவிடக் கோருதல், பணி நெருக்கடியை தவிர்த்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி 4.5.2017 அன்று உதகமண்டலத்தில் மாவட்டச் செயலாளர் பெ.விஸ்வநாதன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பல்வேறு துறைவாரி சங்க நிர்வாகிகள் சுப்பிரமணி, சிவக்குமார், குமாரராஜா, அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஆஸரா ஆகியோர் பங்கேற்று கண்டன உரையாற்றினர். சாரதி நன்றி கூறினார்.

### உணவுபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலர் நல சங்கம்

சங்கத்தின் புதிய நிர்வாகிகளுக்கான தேர்தலில் தலைவராக கி.கந்தசாமி, துணைத் தலைவர்களாக கி.ரவி, ம.தனசேகரபாண்டியன், நீ.சிலம்பரசன், பொதுச் செயலாளராக திருமதி தா.ஹரிணிதேவி, இணைச் செயலாளர்களாக கே.ரவி, கி.புருஸ்லி மனாசேகிங், என்.ரமேஷ், பொருளாளராக திருமதி ஆர்.லட்சுமி, மகளிரணி செயலாளராக திருமதி மா.பரமேஸ்வரி ஆகியோர் தேர்வு செய்யப் பட்டனர்.

### தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்கம்

சங்கத்தின் 4வது கரூர் மாவட்ட மாநாடு 13.5.2017 அன்று மாவட்டத் தலைவர் எல்.கே.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. இதில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். தலைவராக தி.திருஞான சம்மந்தம், இணைச் செயலாளர்களாக ஆ.மனோகரன், டி.சரவணன், எம்.ஸ்ரீரங்கன், செயலாளராக என்.வெங்கடாச்சலம், இணைச் செயலாளர்களாக ப.மணிமேகலை, பி.ரவிக் குமார், பழனிச்சாமி, குமாரராஜா, பொருளாளராக ஆர்.முரளிக்கண்ணன், மாநில செயற்குழு உறுப்பினராக மா.சரவணன், தணிக்கை யாளர்களாக மா.பரமேஸ்வரன், எஸ்.பூங்கொடி, ஆ.ஜெயராமன், ஆறுமுகம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். புதிய நிர்வாகிகளை வாழ்த்தி அரசு ஊழியர் சங்க மாநில துணைத் தலைவர் மு.சுப்பிரமணியன் பேசினர். ❖

# பணி நிறைவு பாராட்டு விழா

### சென்னை

அரசு ஊழியர்களின் வாழ்க்கையை மாற்றியமைத்தை 1988ஆம் ஆண்டு நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவரும், 2003ஆம் ஆண்டு 1,76,000 ஊழியர்களை தமிழக அரசு பணி நீக்கம் செய்ததை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தவரும், வணிகவரிப் பணியாளர் சங்கத்தின் மாநில நிர்வாகியாகவும், அரசு ஊழியர் சங்கத்தின் பகுதி நிர்வாகியாகவும் 25 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய கு.முருகன் 30.06.2017 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்றார். அதற்கான பாராட்டு விழா 30.6.2017 அன்று மாலை சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள தமிழ்நாடு வணிகவரிப் பணியாளர் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில பொதுச் செயலாளர் மு.அன்பரசு, முன்னாள், இந்நாள் நிர்வாகிகள், அரசு ஊழியர் சங்க வட சென்னை, தென் சென்னை மாவட்ட, வட்டக்கிளை நிர்வாகிகள் பங்கேற்று வாழ்த்தி பேசினர். நிறைவாக கு.முருகன் ஏற்புரையாற்றினார்.

### விருதுநகர்

சாத்தூர் வட்டக்கிளையின் சார்பாக முன்னால் மாவட்ட துணைத் தலைவர் இ.சேவியர் பணி நிறைவு பாராட்டு விழா 5.6.2017 அன்று மேல் சாத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் வட்டத் தலைவர் என்.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது. எஸ்.இராஜன் வரவேற்க, சிவக்குமார் சிறப்புரையாற்ற, மாவட்டச் செயலாளர் ச.இ.கண்ணன் வாழ்த்தி பேசினார். "ஊதிய மாற்ற அலுவலர் குழுவும், அரசு ஊழியர்களின் எதிர்பார்ப்பும்" என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் மாநில துணைத் தலைவர் என்.குமாரவேல் கருத்துரையாற்றினார். சுதந்திர கிளாரா நன்றி கூறினார்.

### கடலூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் கடலூர் மாவட்ட செயலாளர் என்.காசிநாதனின் பணி ஓய்வு பாராட்டு விழா கடலூரில் நடைபெற்றது. இதில் மார்க்சிஸ்ட் கட்சியின் மத்தியக்குழு உறுப்பினர் கே.பாலகிருஷ்ணன், மாவட்ட செயலாளர் டி.ஆறுமுகம், அரசு ஊழியர்




சங்க மாநில பொதுச் செயலாளர் மு.அன்பரசு, மாநில செயலாளர் என்.ஜனார்தனன், மாவட்ட செயலாளர் எல்.அரிகிருஷ்ணன், பொருளாளர் டி.ரவிச்சந்திரன், குடியிருப்போர் சங்க பொதுச்செயலாளர் எம்.மருதவாணன், விவசாய சங்க மாவட்ட தலைவர் ஜி.மாதவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பேசினார்கள். ❖

## வாழ்த்துக்கள்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் அரியலூர் மாவட்ட அவசர செயற்குழுக் கூட்டம் 16.6.2017 அன்று மாலை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மாவட்டத் தலைவர் ஜி.பஞ்சாபிகேசன் தலைமையில் நடைபெற்றது. மாநில துணைத்தலைவர் எஸ்.பார்த்திபன், மாநிலச் செயலாளர் ஏ.பெரியசாமி ஆகியோர் பங்கேற்றனர். மாவட்ட/வட்ட நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் பங்கேற்ற இச்செயற்குழுவில் சங்கத்தின் மாவட்டச் செயலாளராக ப.துரைவேந்தன், பொருளாளராக வி.ஆர்.செந்தில்குமார் ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

# மாவட்ட திட்ட இயக்குநரை கண்டித்து ஆர்ப்பாட்டம்



புதுக்கோட்டை மாவட்ட திட்ட இயக்குநர் எம்.சந்தோஷ் குமாரின் ஊழியர் விரோதப் போக்கைக் கண்டித்தும், மாவட்ட நிர்வாகம் கொடுத்த தொல்லையால் மன உளைச்சலுக்கு ஆளாக்கப்பட்டு, உயிரிழந்த ஆவுடையார்கோவில் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பி.விஜயசுந்தரம் என்பவரின் மரணத்திற்கு நியாயம் கேட்டும், தொடர்ந்து வரும் எல்லை மீறிய தொல்லைகளுக்குக் காரணமான திட்ட இயக்குநரை பணியிட மாற்றம் செய்யக் கோரியும், மாநிலத் தலைவர் எம்.சுப்பிரமணியன், மாநிலப் பொதுச் செயலாளர் பி.கிருஷ்ணசாமி மற்றும் மாவட்ட பொறுப்பு நிர்வாகியான மாநிலச் செயலாளர் எம்.செல்வகுமார் ஆகியோர் பங்கேற்ற கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட ஆட்சியரக அலுவலக வளாகத்தில் 7.6.2017 அன்று நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டு, மாவட்டம் முழுவதும் அனைத்து ஒன்றியங்களி லும், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தி லும் ஒரே நாளில் பிரச்சார இயக்கம் நடை பெற்றது.

மாவட்ட ஆட்சித் தலைவர் எழுத்துபூர்வமாக பேச்சு வார்த்தைக்கு அழைத்ததின்பேரில், பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வது எனவும், ஒருவேளை கோரிக்கை ஏற்கப்படாத பட்சத்தில் 9.6.2017 அன்று புதுக்கோட்டைக்கு புதிய மருத்துவக் கல்லூரியை திறந்து வைக்க வருகை தரும், தமிழக முதல்வரிடம் பேரணியாகச் சென்று முறையிடுவது என முடிவு செய்யப்பட்டது.

மாவட்ட ஆட்சியர், மாநிலத் தலைவர், மாநிலப் பொதுச் செயலாளர், மாநிலச் செயலாளர் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்ற பேச்சுவார்த்தை சுமார் ஒருமணி நேரம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.;

பேச்சுவார்த்தையின் முடிவில் இரவு நேர ஆய்வுக் கூட்டம், இரவு 11.00 மணிக்கு மேல் வட்டார வளர்ச்சி அலுவலர்களை அலைபேசி மூலம் ஆய்வு செய்து திட்டி மன உளைச்சலை உண்டாக்குவது, உள்ளிட்ட நிலையை உருவாக் கும் திட்ட இயக்குநரை மாறுதல் செய்திடக் கோரி, சங்கம் கோரிக்கை மனு அளித்தால் அதனை சென்னை ஊரக வளர்ச்சி இயக்குநர், அரசு செயலர் ஆகியோருக்கு பரிந்துரை செய்து அனுப்புவதாகவும், அதன் நகலை அமைப்பிற்கு வழங்க மாவட்ட ஆட்சியர் ஒப்புக்கொண்டார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அளித்த உறுதிமொழியை ஏற்று, அன்று மாலை நடைபெற இருந்த கண்டன ஆர்ப்பாட்டம் விளக்கக் கூட்டமாக மாற்றப்பட்டது. இதில் 250 ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்திற்கு மாவட்டத் தலைவர் எஸ்.இராமச்சந்திரன் தலைமை வகித்தார். மாவட்டத் துணைத் தலைவர் எஸ்.இரவிச்சந்திரன் வரவேற்புரையாற்றினார். மாவட்டப் பொறுப்பு நிர்வாகியும் மாநிலச் செயலாளருமாகிய எம்.செல்வகுமார் துவக்க உரை நிகழ்த்தினார். மாவட்டச் செயலாளர் எஸ்.பால்பிரான்ஸிஸ் கோரிக்கை விளக்க உரையாற்றினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில், மாவட்டச் செயலாளர் ஆர்.ரெங்கசாமி வாழ்த்துரை வழங்கினார். மாநிலத் தலைவர் எம்.சுப்பிர மணியன் நிறைவுரையாற்றினார். மாவட்டத் துணைத் தலைவர் தி.நடராஜன் நன்றியுரை ஆற்றினார்.

புதுக்கோட்டை மாவட்ட ஊரக முகமை அலுவலகம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட் டத்திற்கு தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்க மாவட்டச் செயலளார் எஸ்.பால்பிரான்சிஸ் தலைமை வகித்தார். கோரிக்கைகளை விளக்கி அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் கே.நாகராஜன், செயலாளர் ஆர்.ரெங்கசாமி உள்ளிட்டோர் பேசினர்.

❖

# இந்த சிஸ்டம் ரொம்ப கஸ்டமப்பா..!

**ஊ**ருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்றொரு பழமொழி நம் ஊரில் சொல்வார்கள். அதைப்போல நீதிபதிகளுக்கு இளைத்தவர்கள் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் தான். சமீபத்தில் நீதியரசர் கிருபாகரன், அரசு பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் தங்களது குழந்தைகளை அரசுப் பள்ளியில் சேர்க்காதது ஏன் என்பது குறித்தும், அதைக் கட்டாயமாக்காதது குறித்தும் அரசுக்கு கேள்விகள் எழுப்பியுள்ளார். அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களே தங்கள் பிள்ளைகளை அதில் படிக்க வைக்காவிட்டால் அவற்றில் தரம் எப்படி இருக்கும் என்ற ஆதங்கத்தின் வெளிப்பாடாகக்கூட அது இருந்திருக்கலாம்.

இந்தக் கேள்வி நியாயமானது என்றால் அரசு மருத்துவமனைகளில் அமைச்சர்களோ, எம்.எல்.ஏ.க்களோ சிகிச்சை எடுத்துக் கொள்வதில்லையே ஏன் என்ற கேள்வி கூட நியாயமானதாகத்தானே இருக்க முடியும். அதேபோல அரசு பள்ளிகளிலும் மருத்துவமனைகளிலும் அரசாங்க சம்பளம் பெறும் கவர்னர், நீதிபதிகள், அமைச்சர்கள் எம்எல்ஏக்கள் முதற்கொண்டு அரசின் கடைநிலை ஊழியர் வரை அனைவரும் கல்வியும் சிகிச்சையும் பெறுவதை அரசு கட்டாயமாக்காததையும் நீதியரசர் கேள்வி கேட்டிருக்க வேண்டும். அதுதானே நியாயம்.

அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் பிள்ளைகள் மட்டுமல்ல அனைவரின் பிள்ளைகளும் அங்குதான் படிக்க வேண்டும் என்ற கட்டாய சட்டமோ அல்லது அரசுப் பள்ளிகளில் படிப்பவர்களுக்கு மட்டுமே அரசுக் கல்லூரிகளிலும், அரசு நிறுவனங்களிலும் வாய்ப்புகள் வழங்கப்படும் என்ற சட்டமோ கட்டாய நடைமுறைக்கு வராமல் தடுத்துக் கொண்டிருப்பது யார்? ஆசிரியர்களா? அரசு ஊழியர்களா? ஆட்சியாளர்களா?

நீதிபதி கிருபாகரனின் இந்தக் கேள்விகள் சிக்கலான நூல்கண்டின் ஒருமுனை என்றால் அதன் முடிவுமுனை தனியார்பள்ளிகளை அரசுப் பள்ளிகளாக மாற்றுவதாகவோ அல்லது மூடுவதாகவோத் தான் இருக்கும். அது நடைமுறைச் சாத்தியமா?

நீதியரசருக்கு அரசுப் பள்ளி ஆசிரியர்கள் மேல் ஏன் அவ்வளவு வெறுப்பு என்று தெரியவில்லை. சுற்றி சுற்றி அவர்கள் மீது தாக்குதல் தொடுத்து 20 கேள்விகளை அரசுக்கு வைத்திருக்கிறார்? இந்திய அரசியலமைப்புச் சட்டம் 21-ஏ ஷரத்து 86வது திருத்த சட்டம், 2002ல் ஆறு வயதுக்கு மேல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு கல்வி கட்டாயமாக வழங்க வேண்டியது அரசின் கடமை என்றும் அதை இலவசமாக வழங்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்தியாவில் எந்த மாநில அரசு இதைச் செய்துள்ளது? ஆனால் நீதிபதி இது குறித்து கேள்வி எழுப்பவில்லை. இது குறித்து ஒரே கேள்வி... ஒரே ஒரு கேள்வி அவர் அரசுக்கு எழுப்பியிருந்தால் போதும் அவர் அந்த 20 கேள்விகளையும் எழுப்ப வேண்டிய அவசியம் வந்திருக்காது.

கல்வி என்பது கடைச்சரக்காகி விட்ட பின் அதில் லாபம் பார்ப்பதைத் தவிர கல்வி வியாபாரிகளுக்கு வேறென்ன வேலை? அரசுப் பள்ளிகளின் தரம் உயர்ந்து, தேர்வு முடிவுகளும் தனியார் பள்ளிகளுக்கு இணையாக வந்துவிட்டால் தனியார் பள்ளி வணிகம் குப்புறப் படுத்துவிடும் என்ற தொழில் ரகசியத்தின் அடிப்படையில் அரசுப் பள்ளிகளின் தரம், அடிப்படை வசதிகள், ஆசிரியர் பற்றாக்குறை, தரமற்ற ஆசிரியர்கள் போன்ற குணங்களோடு அரசுப் பள்ளிகள் பேணப்பட்டு வருவதற்கு தனியார் பள்ளிகளின் கைங்கர்யம் உண்டு என்ற குற்றச்சாட்டும் பரிசீலனைக்குரிய ஒன்றாகும்.

அரசுப் பள்ளிகளை விடுத்து பெற்றோர்கள் தனியார் பள்ளிகளுக்கு செல்வது ஏன்? என்ற கேள்விக்கு நீதியரசர் தன்னுடைய பிள்ளைகளை எந்த பள்ளியில் படிக்க வைக்கிறார் என்று பதில் கூறினாலே விடை கிடைத்து விடும். அரசியல் சாசனத்தில் கூறியுள்ள கல்விக்கான உரிமைகளை அரசு கண்டுகொள்ளாமல் இருப்பது வேடிக்கையல்ல, நீதிமன்றங்களும், நீதிபதிகளும் கூட அவற்றை கண்டு கொள்வதில்லை என்பது தானே இதுநாள்வரை நிதர்சனம். எத்தனை நீதிபதிகளின் குழந்தைகள் அரசுப் பள்ளியில் பயில்கிறார்கள். அரசியலமைப்பு சட்டத்தில் அரசாங்கம் கண்டிப்பாக 6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு கல்வியை இலவசமாக வழங்க வேண்டும் என்று உறுதியிடப்படுள்ள நிலையில் அதை செயல்படுத்த அரசுகளிடம் நீதிபதிகள் யாரும் கேள்வி கேட்காதது ஏன்? என்றுதான் நமக்கு கேட்கத் தோன்றுகிறது.

நீதிபதி கேட்டுள்ள கேள்விகளில் முக்கியமானது ஆசிரியர்கள் சங்கங்கள் தொடங்குவதை ஏன் தடை செய்யக்கூடாது? என்பது. ஆசிரியர்கள் சங்கம் அமைத்தால் அவர்கள் குழந்தைகளுக்கு கல்வி போதிப்பது குறைந்து விடும் என்பதும் சங்க நடவடிக்கைகளில் மட்டுமே அவர்கள் கவனம்

இருக்கும் மாணவர்கள் மீது இருக்காது என்ற நல்லெண்ணமாக அது இருக்கலாம். ஆனால் நீதிபதிகள் அதைத்தாண்டி ஏன் யோசிப்பதில்லை என்று தெரியவில்லை. ஆசிரியர்கள் ஏன் போராட்டம் நடத்துகிறார்கள். அவர்கள் கோரிக்கைகளை அரசு உடனடியாக பேசி தீர்வு காண வேண்டும் என்பதை கறாராக அரசாங்கத்திடம் கேள்வி கேட்பதில்லை இந்நீதிமன்றங்கள்.

மேலும் சங்கம் அமைத்துக் கொள்ளும் உரிமை எப்படி சட்டப்படியான உரிமையோ அதைப்போலவே அதை தடை செய்யவும் சட்டப்படியான காரணங்கள் தேவை என்பதை அறியாதவரல்ல நீதியரசர். ஆனால், அவர் அதை ஏன் தடைசெய்யக்கூடாது என்று கேட்கும் கேள்வி அடக்குமுறையின் வெளிப்பாடாகவே தோன்றுகிறது.

அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் பிள்ளைகளை, அரசு பள்ளிகளில் படிக்க வைப்பதனால் மட்டுமே அவற்றின் தரம் உயர்ந்துவிடும் என்பது அபத்தமானது. ஆசிரியர்கள் காலதாமதமாக பள்ளிக்கு வருவதையும், வகுப்பு நேரங்களில் செல்போன் பேசிக் கொண்டிருப்பதையும், சொந்த ஊரிலேயே பணி புரிவதையும், அவர்களுக்கு எந்தவிதமான பயிற்சி அளிக்கப்படுகிறது என்பது குறித்தும் கேள்விகள் எழுப்பியுள்ள நீதிபதி, அரசுப் பள்ளியில் கழிவறை முதல் வகுப்பறை வரை உள்ள அடிப்படை வசதிகள் குறித்தோ, ஆசிரியர்கள் பற்றாக்குறை குறித்தோ, எத்தனை மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் இருக்கிறார் போன்றவை குறித்தோ கேள்விகள் எழுப்பாதது ஏன் என்று தெரியவில்லை.

இதுபோன்று அனுமானபூர்வமான கேள்விகளை எழுப்பி மக்கள் மத்தியில் தங்களுக்கு சமூக அக்கறை உள்ளதான தோற்றத்தை ஏற்படுத்தும் நீதிபதிகள் உண்மையில் சமூக அக்கறை உள்ளவர்கள்தானா என்ற சந்தேகங்களும் எழாமல் இல்லை. ஹெல்மெட் போடுவதை கட்டாயமாக்காதது ஏன்? என்று கேள்வி எழுப்பி அதை செய்து முடிக்க தீவிரம் காட்டிய நீதிமன்றம் தான், டாஸ்மாக் கடைகளை மூடி இளைய சமுதாயத்தினரின் எதிர்காலத்தை போதையிலிருந்து மீட்டுவர சாதாரண நடவடிக்கைகூட எடுக்கவில்லை. மதுக்கடைகளை மூட தினம் தினம் மக்கள் போராடுகிறார்கள். நீதிமன்றத்தை நாடுகிறார்கள். ஆனால் நீதிமன்றங்களோ இது அரசின் கொள்கை முடிவு அதில் நாங்கள் தலையிட முடியாது என்கின்றன. அரசியலமைப்பு சட்டத்தில் கட்டாயமாக இலவசமாக வழங்கப்பட வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ள கல்வி மற்றும் சுகாதாரத்தை தனியார்வசம் விட்டுவிட்டு டாஸ்மாக் கடைகளை அரசாங்கமே நடத்துவதுதான் அரசாங்கத்தின் கொள்கை முடிவாம்? இவற்றை கேள்வி கேட்க நீதிமன்றங்கள் தயங்குகின்றன.

நீதிமன்றங்களின் சில நடவடிக்கைகள் மக்களுக்கு அவற்றின் மீதான கடைசி நம்பிக்கையையும் சுக்குநூறாக்குவதாக உள்ளன. உரிமைக்காக போராடுகிறார்கள் அரசு ஊழியர்கள். பேச்சு வார்த்தைக்குகூட அழைக்கவில்லை அரசு. காலவரையற்ற வேலை நிறுத்த அறிவிப்பிற்குப் பின்னர் அமைச்சர் வந்து பேசுகிறார். கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான கால அவகாசம் கேட்டு அதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகிறார்.

ஆனால் கேட்ட கால அவகாசம் முடிந்த பின்னரும் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் அரசு ஊழியர்கள் வீதிகளில் இறங்கிப் போராடுகிறார்கள். அரசு ஊழியர்களை உடனடியாக அழைத்துப்பேசி அரசாங்கம் சுமூக முடிவெடுக்க வேண்டும் என்று அறிவுறுத்த வேண்டிய நீதிமன்றம் அதற்கு மாறாக, அரசு ஊழியர்கள் போராட்டம் நடத்துவது சட்ட விரோதம், வேலை நிறுத்தம் செய்ய அவர்களுக்கு உரிமையில்லை என கருத்துரைக்கிறது. இதன் பெயர்தான் நீதியா? என்று கேட்கத் தோன்றுகிறது.

போக்குவரத்து தொழிலாளர்களுக்கு தரவேண்டிய நிலுவைத் தொகையை போக்குவரத்துக் கழகம் தராமல் இழுத்தடிக்கிறது. ஊழியர்கள் போராடுகிறார்கள். வழக்கு நீதிமன்றம் செல்கிறது. ஓய்வு பெற்று ஆறு ஆண்டுகளாக ஓய்வூதியப் பலன்களை பெறாமல் தவிக்கும் தொழிலாளிக்கு அரசு ஏன் ஓய்வூதியம் வழங்கவில்லை என்று கேட்பதற்கு பதிலாக போக்குவரத்து தொழிலாளர்கள் போராட்டத்தை கைவிட்டுவிட்டு உடனடியாக பணிக்கு திரும்பாவிட்டால் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம் என நீதிமன்றம் உத்தர விடுகிறது. சட்டப்படி நடிவடிக்கை யார் மீது எடுக்க வேண்டும்? இதுபோல் ஒரு நீதிபதி ஓய்வு பெற்று அவருக்கு ஆறு ஆண்டுகளாக ஓய்வூதியமும், ஓய்வூதியப் பலன்களும் கொடுக்காமல் அரசாங்கம் இருந்தால் இதே நீதிதான் அவருக்கும் வழங்கப்படுமா? என்பது மில்லியன் டாலர் கேள்வி. நீதி, நியாயம், நேர்மை என்ற ஊருக்கு உபதேசிக்கும் இந்த சிஸ்டம் ரொம்ப கஸ்டமப்பா,

ஆக, நீதிபதிகள் என்பவர்கள் நீதியின் அரசாட்சியாகவும், மக்களின் மனசாட்சியாகவும் இல்லாமல், அரசாங்கத்தின் விசுவாசிகளாக இருக்கும் வரை எத்தனை அரசியலமைப்பு சட்டங்கள் வந்தாலும் உரிமைக்காக போராடும் உழைக்கும் வர்க்கத்தினர் உப்புக் கண்டங்களாகவே உணரப்படுவர்.

- **ஆதித்யா**

# நாகப்பட்டினம் நிகழ்வுகள்

### 131வது மே தினம்

நாகை தொழிற்சங்க கூட்டமைப்பு சார்பில் 131வது மே தினத்தை முன்னிட்டு தொழிற்சங்க கூட்டமைப்புத் தலைவர் சு.சிவகுமார் தலைமை யில் நாகை வருமான வரி அலுவலகத்தில் 01.05.17 காலை பொதுச் செயலாளர் எஸ்.மணி கொடி ஏற்றி வைத்தார்.

பி.எஸ்.என்.எல் அலுவகம், அஞ்சல்துறை, இந்து சமய அறநிலையத்துறை, எல்.ஐ.சி, அரசு மருத்துவமனை, வட்டாட்சிய ரகம், நீதிமன்ற வளாகம், அரசு போக்குவரத்து பணிமனை, அ.து.ம. மகளிர் கல்லூரி, நகராட்சி, வட்டார வளர்ச்சி அலுவலகம், அரசு விரைவு போக்குவரத்து பணிமனை, மாவட்ட ஆட்சியரக வளாகம், ஐ.டி.ஐ., வேலைவாய்ப்பு அலுவலகம் உள்ளிட்ட அலுவலகங்கள் முன்னுள்ள கொடிக் கம்பங்களில் உள்ள கொடிகளை பல்வேறு சங்கத் தலைவர்கள் ஏற்றிவைத்தனர்.

அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல், மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன், வட்டத் தலைவர் சி.பாலசுப்பிரமணியன், வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன், இந்திய தொழிற்சங்க மைய மாவட்டச் செயலாளர் சீனி.மணி உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட சங்கத் தலைவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். தொழிற்சங்க கூட்டமைப்பு பொருளாளர் வி.பாலசுப்பிரமணியன் நன்றி கூறினார்.

### ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு ஓய்வு பெற்ற பள்ளி கல்லூரி ஆசிரியர் சங்க நாகை மாவட்டம் சார்பில் நாகை வட்டாட்சியரகம் முன்பு மாவட்டத் தலைவர் எம்.என்.பக்கிரிசாமி தலைமையில் 20.06.2017 அன்று மாலை 35 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்ட துணைச் செயலாளர் ஏ.கணேசன் வரவேற்றார். மாவட்டச் செயலாளர் வி.பால சுப்பிரமணியன் விளக்கவுரையாற்றினார். மாநில பொதுக்குழு உறுப்பினர் மு.அருணாச்சலம், நாகை வட்டாரச் செயலாளர் டி.கலியபெருமாள், மாவட்டப் பொருளாளர் பி.காத்தமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஓய்வூதியர் சங்க மாவட்டச் செயலாளர் சொ.கிருஷ்ணமூர்த்தி, தொழிற்சங்க மைய மாவட்டச் செயலாளர் சீனி.மணி, அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நாகை தொழிற் சங்கக் கூட்டமைப்பு தலைவர் சு.சிவகுமார் நிறைவுரையாற்றினார். வேதாரண்யம் வட்டாரத் தலைவர் இராம. இளங்கோவன் நன்றி கூறினார்.

### இந்தித் திணிப்பை எதிர்த்து...

மத்திய அரசின் இந்தி திணிப்பை எதிர்த்து தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்க நாகைக் கிளையின் சார்பில் நாகை அவுரித் திடலில் கிளைத் தலைவர் ந.பாபுராஜ் தலைமையில் 15.05.2017 அன்று மாலை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கிளைச் செயலாளர் சு.மணி வரவேற்புரையாற்றினார்.

அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன், துறைவாரி சங்க நிர்வாகிகள் ப.அந்துவன் சேரல், சொ.கிருஷ்ணமூர்த்தி, வ.பாலசுப்பிரமணியன், சௌரி.ராஜேந்திரன், த.மு.எ.க.ச ப.சுபாஷ் சந்திரபோஸ் மற்றும் ஆவராணி ஆனந்தன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். மாவட்டத் தலைவர் ந.காவியன் நிறைவுரையாற்றினார். கிளைப் பொருளாளர் மு.பெரியசாமி நன்றி கூறினார். இந்தி திணிப்பிற்கு எதிரான கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

### கருத்தரங்கம்

பாரதி புத்தகாலயம் நாகப்பட்டினம் கிளையின் சார்பில் நாகை அரசு ஊழியர் சங்கக் கட்டிடத்தில் 10.06.17 மாலை தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்க நாகைக் கிளைச் செயலாளர் சு.மணி தலைமையில் மார்க்ஸ் 200ஆம் ஆண்டு துவக்க விழா கருத்தரங்கம் நடை பெற்றது. அரசு ஊழியர் சங்க நாகை மாவட்டப் பொருளாளர் பா.ராணி வரவேற்புரையாற்றினார்.

மார்க்ஸின் தேர்வு செய்யப்பட்ட நூல்கள் தொகுப்பிற்கான 27 நூல்கள் முன்பணத்தை பெற்றுக்கொண்டு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நாகைமாலி துவக்கவுரையாற்றினார். திண்டுக்கல் ஸ்ரீதர் மார்க்ஸ் குறித்து கருத்துரை யாற்றினார். இந்திய தொழிற்சங்க மைய நாகை மாவட்டச் செயலாளர் சீனி.மணி நன்றி கூறினார். பாரதி புத்தகாலய நாகைக் கிளை மேலாளர் சொ.கிருஷ்ணமூர்த்தி நிகழ்ச்சியை ஒருங் கிணைத்தார்.